விலை: 60.00
பக்கங்கள் - 24 + II
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 26
ஒலி 136 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 21 ஞாயிற்றுக்கிழமை (04.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வியட்நாம் பயணமானார் ஜனாதிபதி அநுர குமார



(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வியட்நாமிற்குப் புறப்பட்டார்.

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 55 ஆவது ஆண்டு 23ஆம் பக்கம் பார்க்க

## புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நகைகள் மக்களிடம் மீள ஒப்படைக்கப்படும்

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இறுதி யுத்தகாலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து மீட்கப்பட்ட பொது மக்களின் தங்கத்தை அவர்களிடம் கட்டாயம் ஒப்படைப்போம் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

# தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நேற்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்தநிலையில்தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நாளை மறுதினம் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது.

குறித்த தேர்தலில் ஒரு கோடியே 72 இலட்சத்து 96 ஆயிரத்து 330 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான இந்தத் தேர்தலில் 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேட்சைக் குழுக்களைச் 23ஆம் பக்கம் பார்க்க

## நீர்வேலியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(அச்சுவேலி)

நீர்வேலி அச்செழுப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் பொலநறுவையைச் சேர்ந்த சின்னராஜா சிறிஸ் 23ஆம் பக்கம் பார்க்க

• வியாசர் பதில்கள்
• ஆச்சி அறிவுரை
• கவிதைக் கலசத்துடன்

உங்கள் சங்குநாதம் உள்ளே

## 524 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் இதுவரை 524 முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைக்கப் 23ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவின் வாசஸ்தலம் புனரமைப்பு என

### ரூ.55 கோடி மோசடி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வாசஸ்தலத்தை புனரமைப்பதற்கான செயற்பாடுகளில் 55 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட் 23ஆம் பக்கம் பார்க்க

## 500 தமிழ்ப் பொலிஸாரை சேவையில் இணைக்க நடவடிக்கை – ஜனாதிபதி

(கொழும்பு)

2025ஆம் ஆண்டு இறுதிக்குள் 500 தமிழ் பொலிஸாரை சேவையில் இணைத்துக் கொள்ளும் ஆலோசனைகள் பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரை 23ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் பங்கேற்க மாட்டார்கள்

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில்வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பங்கேற்கமாட்டார்கள் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகக் கருதப்படாமையால் இந்தமுறை வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பங்கேற்க 23ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் நீரில் மூழ்கிய மாணவன் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நீரில் மூழ்கிய 14 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

நேற்று இச்சம்பவம் இடம் 23ஆம் பக்கம் பார்க்க

## அரகலய போராட்டத்தில் வீடு எரிக்கப்பட்டதாக 92 பிரதேச, நகர உறுப்பினர்கள் ரூ.62 கோடி இழப்பீடு பெற்றுள்ளனர்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

2022ஆம் ஆண்டு அரகலய காலப்பகுதியில் தீ வைப்பால் தமது வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதாக முன்னாள் பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள் 92 பேர், 62 கோடி ரூபாயை இழப் 23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



சைவசமய காவலராக நாற்பத்து நான்கு ஆண்டுகள் தொடர்ந்து செவ்வனவே தன் கடமையை ஆற்றி வந்து 01.05.2025 வியாழக்கிழமை அன்று சிவலோகப் பிராப்தி அடைந்த நல்லை ஆதீன குரு முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்** சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய தொண்டுகள் எண்ணிலடங்காதவை. அவரின் ஆத்மா இறைவன் பாதக்கமலங்களில் இளைப்பாற எல்லாம் வல்ல பொலிகண்டி கந்தவனப் பெருமானினதும், மருதாம்புலம் பத்திரகாளி அம்பாளினதும் பாதாரவிந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(4098)

இங்ஙனம்

**சிவப்பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதக்குருக்கள் (J.P) குடும்பம்**

**பிரதமகுரு பொலிகண்டி கந்தவனம் தேவஸ்தானம்,**

**மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்**


# நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

**காயத்திரி திருமண சேவை**

கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்

**077 844 9861, 076 776 3291**

(4093)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 09 - 1942 | 15 - 04 - 2024 |



**அமரர் கந்தையா பாலசுப்பிரமணியம்**

தாண்டும் நாட்களெல்லாம் உங்கள் நினைவுகளாய் விரிந்து
ஆண்டொன்று முடிந்தது நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து...
வேண்டும் வரங்களெல்லாம் பெற்றோம் உம்வழியில்
மீண்டும் வாராதோ அந்நாட்கள் - அப்பா உங்கள் நிழலில்...

"இலட்சுமி வாசம்",
இணுவில் கிழக்கு, இணுவில்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

(1094)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 - 11 - 1940 | 02 - 05 - 2025 |



## திருமதி கமலாம்பிகை வீரசிங்கம்

மண்டைதீவு சிறுப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை வீரசிங்கம் 02.05.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் குகனேஸ்வரி (ஜெயந்தி), சாந்தி, பரமேஸ்வரன், வசந்தி, சாயீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜேந்திரம், இரத்தினேஸ்வரன், கமலாதேவி, சிவரூபராஜா, ஹேமலதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நடேசலிங்கம், இலட்சுமணன் (செட்டித்துரை), கைலாசநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்ஷன், குமரன், ஜனனி, காலஞ்சென்றவரான வித்தியா மற்றும் ராஜ்பாரதி, தனுஷ், செந்தூரன், கஜன், கானுஜா, கானுஜன், ஆத்மீகன், அர்ஜுன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல் -
குடும்பத்தினர்

(4092)

# 13ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06.04.1939

உதிர்வு 28.04.2012

அமரர்

## திருமதி செந்திவடிவேலு சிவரூபராணி (இந்திரா)

திதி - சப்தமி (04.05.2025)

அன்பின் உறைவிடமாய் எமை அன்போடு அணைத்து
நாங்கள் எல்லோரும் நலமே வாழ
அன்பு மழை பொழிந்து எமை வாழ வைத்த தெய்வமே!
ஆண்டுகள் பதின்மூன்று கடந்தாலும் உன் நாமம்
எந்நாளும் எம் நெஞ்சங்களை விட்டகலாது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(4090)

"மாதர் வளவு"
மல்லியோடை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்; மந்தமான நிலவரத்தைக் காண்பிக்கிறது

## ஜனநாயக சீர்திருத்தங்கள், தேர்தல் ஆய்வுகள் நிறுவனம் தகவல்

(கொழும்பு)

**கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இந்தத் தேர்தலில் மக்கள் மற்றும் வேட்பாளர்களின் ஆர்வம் குறைவடைந்துள்ளதோடு, பிரசாரங்களும் மந்த கதியிலேயே இடம்பெற்றதாக ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேர்தல் ஆணைக்குழுவினால் அமைதிக்காலம் அறிவிக்கப்பட்டாலும் சிலர் இறுதி நேரத்தில் கூட சமூக வலைத்தளங்கள் உள்ளிட்டவற்றின் ஊடாகப் பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு முயற்சிப்பர்.

அல்லது அரசியல் கட்சிகளால் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படக் கூடும். தேர்தல் முடிவுகள் வெளியாகி வெற்றி பெறுபவர்களுக்கு இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் பாதகமாக அமையக் கூடும்.

எனவே அமைதிக் காலத்தில் எந்த வகையிலும் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறும் ஏழாவது சந்தர்ப்பம் இதுவாகும். எவ்வாறிருப்பினும் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மந்தமான ஒரு நிலவரத்தையே காண்பிக்கிறது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்தத் தேர்தல் அதிக நேரத்தை நீதிமன்றங்களிலேயே செலவிடப்பட்ட ஒன்றாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் பெருமளவான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனால் சில சிக்கலான நிலைமைகளும் ஏற்பட்டன. இவை தொடர்பில் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையால் அரசியல் கட்சிகளும் விளிம்பிலேயே நின்று கொண்டிருந்தன.

339 உள்ளூராட்சிமன்றங்களில் 114 உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே ஒரு வேட்புமனுக் கூட நிராகரிக்கப்படவில்லை.

இது ஒரு வகையில் சவால் மிக்கதொரு நிலைமையாகும். இதனால் கட்சிகளும் வேட்பாளர்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டதால் பிரசாரங்களும் மந்த கதியிலேயே இடம்பெற்றன.

2010ஆம் ஆண்டிலிருந்து மதிப்பிடும் போது இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலே மிகக் குறைந்தளவான செலவில் நடத்தப்படும் தேர்தலாகவும் காணப்படுகிறது.

ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களிலும் மிகக் குறைந்தளவிலேயே விளம்பரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் மற்றும் மக்கள் மத்தியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மீதான ஆர்வம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

இம்முறை சுமார் 70,000 வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். இவர்களில் சுமார் 10,000 பேர் மாத்திரமே பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக எமது மதிப்பீட்டில் இனங்காணப்பட்டுள்ளது.

நேரடியாக அரசியலிலோ பிரசார நடவடிக்கைகளிலோ ஈடுபடாமல் இருப்பதென்றால் வேட்புமனுத்தாக்கல் செய்யாதிருப்பதே உசிதமானதாகும்.

எவ்வாறிருப்பினும் ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் மிகக் குறைவாகவே பதிவாகியுள்ளன. பொதுச்சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதும் குறைவடைந்துள்ளன என அவர் தெரிவித்தார். ( நி-8)

# ஜூனில் மின் கட்டணம் அதிகரிக்கும் உறுதிப்படுத்தினார் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

2025 ஜூன் மாதத்தில் மின்சார கட்டண திருத்தத்தின் போது கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



தொலைக்காட்சி அரசியல் கலந்துரையாடலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுடன் இணைந்து, இந்த செலவு - மின்சார விலை நிர்ணயம் மேற்கொள்ளப்படுவதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ந்தும் திறைசேரி, இலங்கை மின்சார சபைக்கு காலவரையின்றி மானியம் வழங்க முடியாது.

எனவே, உண்மையான உற்பத்திச் செலவுகளின் அடிப்படையில் மின்சாரம் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அரசாங்கம் மீன்பிடித்துறை போன்ற பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு திறைசேரி மூலம் நிவாரணம் வழங்க முடியும்.

எனினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், வணிகக் கொள்கைகளின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

மின்சாரக் கட்டணங்களின் அடுத்த திருத்தம் ஜூன் 1ஆம் திகதி மேற்கொள்ளப்படும் என்பதையும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது ஒரு தேர்தல் தந்திரம் அல்ல என்றும், கணிப்புகள் மற்றும் ஒழுங்குமுறை மேற்பார்வையின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட சரிசெய்தல் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

# முப்படைகளில் இருந்து தப்பிச்சென்ற 2,325 பேர் கைது

(கொழும்பு)

முப்படைகளில் இருந்து தப்பிச்சென்றவர்களில் 2,325 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களில் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 2017 பேரும், கடற்படையில் இருந்து தப்பிச் சென்ற 145 பேரும், விமானப்படையில் இருந்து தப்பிச் சென்ற 163 பேரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக முப்படைகளில் இருந்து தப்பிச் சென்ற 281 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (நி-8)

# பகிடிவதைக்கு எதிர்ப்புத் தெரிவித்த மாணவன் மீது கொடூரத் தாக்குதல்

(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடத்தில் கல்வி கற்கும் மூன்றாம் ஆண்டு மாணவர் ஒருவர், பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், வேறு ஒரு மாணவர் குழுவால் குறித்த மாணவன் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் தற்போது வெலிகம பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த மாணவன், பல்கலைக்கழகத்தில் பகிடிவதைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அவர் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர் புனைப்பெயர் இல்லாமல் சுதந்திரமாக நடமாடியதும் இந்தத் தாக்குதலுக்கு காரணமாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

சுமார் 20. மாணவர்கள் அவரது விடுதிக்கு வந்து, தலைக்கவசத்தால் தலையிலும் முதுகுப் பகுதியிலும் மனிதாபிமானமற்ற வகையில் தாக்கியதாக அந்த மாணவன் தெரிவித்துள்ளார். சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் ஒருவர் பகிடிவதை காரணமாக ஏற்பட்ட மனஅழுத்தம் காரணமாக உயிரிழந்த சம்பவம் நாட்டில் இன்னும் பேசு பொருளாக இருக்கும் நிலையில், இந்தத் தாக்குதல் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)


## உதவியாளர் தேவை

சுன்னாகத்தில் உள்ள Hotel ஒன்றிற்கு ஓரளவு சமையல் தெரிந்த சமையல் உதவியாளர் தேவை.

- ரொட்டி செய்ய தெரிந்தவர் விரும்பத்தக்கது.

076 400 1234, 075 702 3918

(4044)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர்விடும் சூரியனாக பெங்களூரு உருகும் பனிமலையாக சென்னை

## மீண்டும் மயிரிழையில் வெற்றி நழுவியது

இந்தியன் பிரிமீயர் லீக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் பெங்களூரு அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

சின்னசாமி மைதானத்தில் நேற்று நடந்த 52ஆவது லீக் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் தோனி பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி, களமிறங்கிய பெங்களூரு அணிக்கு கோலி - பெத்தேல் அதிரடியான ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தனர்.

இருவரும் சென்னையின் பந்துவீச்சை சிக்சஸருக்கும், பவுண்டருக்குமாக பறக்கவிட்டனர். இதனால், 10.1 ஓவரிலேயே அந்த அணி 100 ஓட்டங்களை கடந்தது. அதிரடியாக ஆடிய இருவரும் அரைச்சதம் அடித்தனர். பெத்தேல், 33 பந்துகளில் 55 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, பதிரானா பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து, ஹோலி 62 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன் பிறகு வந்த பட்டிதர் (11), ஜிதேஷ் (7) ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

இறுதியில் களமிறங்கிய ரொமேரியோ ஷெப்பேர்ட் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 14 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். இது பிரீமியர் லீக் கிரிக்கெட் வரலாற்றில் 2வது அதிக வேக அரைச்சதமாகும்.




20 ஓவர்கள் நிறைவில் பெங்களூரு அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைக் குவித்தது.

214 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு டன் களம் இறங்கிய சென்னை அணியில் ஆரம்பவீரர்கள் ஆயுஷ் ரஷீத் இருவரும் அதிரடியாக ஓட்டம் குவிக்க தொடங்கிய நிலையில் ஷேக் ரஷீத் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த சாம் கரன் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஆயுஷ் மாத்ரே ரவீந்திர ஜடேஜா ஜோடி அதிரடியாக ஆடிய நிலையில் ரவீந்திர ஜடேஜா 29 பந்துகளில் அரைச்சதடித்தார். தொடர் ந்து அதிரடியாக ஆடி ஆயுஷ் 94 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

அடுத்ததாக பிரெவிஸ் வந்த வேகத்தில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார்.

தோனியும், ஜடேஜாவும் ஓட்டங்களைக் குவித்தனர். 6 பந்துகளில் 15 ஓட்டங்கள் வெற்றி இலக்கு என்ற நிலையில் 12 ஓட்டங்களில் தோனி ஆட்டமிழந்து வெளியேறினார்.

ஜடேஜா 77 ஓட்டங்களில் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் சென்னை 5 விக்கெட்டுக்களை இழப்பிற்கு 211 ஓட்டங்கள் எடுத்து 2 ஓட்டங்களால் வீழ்ந்தது. (ம-7)

**10 முறை**

சென்னை அணிக்கு எதிராக அதிக அரைச்சதம் அடித்த வீரர்களில் ஹோலி (10 முறை) முதலிடம் பிடித்தார். தலா 9 அரைசதம் அடித்த வோர்னர், தவான், ரோகித் அடுத்து உள்ளனர்.


## விற்பனைக்கு

- யாழ்.பிறவுண் வீதியில் 4 பரப்புக் காணியும்
- யாழ்.சிவகுருநாதன் வீதியில் 4 பரப்புக் காணியும்
- யாழ்.பிறவுண் வீதியில் 3 பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 16 அடி அகலமும் 216 அடி நீளம் கொண்டதனிக்கடையும்
- நிலாவரையில் 70 பரப்புக் காணியும்
- நாவற்குழியில் சுற்று மதிலுடன் கூடிய 20 பரப்புக் காணியும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் 1 ½ பரப்பு, 2 பரப்புக் காணித் துண்டுகளும் உடன் விற்பனைக்கு உண்டு.

(C-2883)

**077 723 2535**


# தோல்விகளை கண்டு பீதியடையப் போவதில்லை

## சி.எஸ்.கே பட்டிங் பயிற்சியாளர் ஹஸி

தோல்விகளால் பீதியடையப் போவதில்லை என சி.எஸ்.கே அணியின் பட்டிங் பயிற்சியாளர் மைக்கேல் ஹஸி கூறியுள்ளார்.

பெங்களூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது, சி.எஸ்.கே அணியின் பட்டிங் பயிற்சியாளரான மைக்கேல் ஹஸி கூறும் போது, "இந்த ஆண்டு சரியாக நடக்கவில்லை என்பதற்காக நாங்கள் நிச்சயமாக பீதியடைந்து எல்லாவற்றையும் தூக்கி எறியப் போவதில்லை, நாங்கள் சில பகுதிகளில் நேர்த்தியாக செயற்பட வேண்டும்.

நாங்கள் புள்ளிகள் பட்டியலில் கடைசி இடத்தில் அமர்ந்திருக்கிறோம் என்பது எனக்குத் தெரியும், நாங்கள் பல ஆட்டங்களை வெல்லவில்லை. ஆனால் உண்மையில் நாங்கள் வெகு தொலைவில் இருப்பதாக நினைக்கவில்லை. பட்டிங் வரிசையில் சில மேட்ச் வின்னிங் வீரர்கள் உள்ளனர். தொடரில் எந்த அணியுடனும் நிச்சயம் எங்களால் போட்டியிட முடியும்.

டெவால்ட் பிரேவிஸ், ஆயுஷ் மாத்ரே உள்ளிட்ட இளம் வீரர்களுக்கு ஐ.பி.எல்லில் விளையாட வாய்ப்பு கிடைப்பது சிறப்பான விடயம். அவர்கள் தங்கள் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு அடுத்த சில ஆண்டுகளுக்கு அணியில் தங்கள் இடத்தை உயர்த்துவார்கள் என்று நம்புகிறோம்.

ஒரு சில வெற்றிகள் மற்றும் சில வீரர்கள் தங்கள் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டால், அது சீசனின் முடிவில் அருமையாக இருக்கும்" என்றார். (6-8)


## காணி விற்பனைக்கு

றக்கா வீதியில் பொஸ்கோ பாடசாலைக்கு 200m தூரத்தில் 2பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு

(4104)

**075 711 3052**

## வேலையாள் தேவை

பண்ணை/கமம் ஒன்றில் வேலை செய்யக்கூடிய ஆண் ஒருவர் தேவை. விரும்பியவர்கள் விண்ணப்பிக்க இலங்கை நேரப்படி 5.00 P. M - 8.00 P. M வரை விண்ணப்பம் செய்யலாம்.

What's appல் எழுதி விண்ணப்பம் செய்யதல் விரும்பத்தக்கது.

076 903 4592 (கதைக்கப் பயன்படுத்த இந்த இலக்கத்தைப் பயன்படுத்தவும்)

+94 77 118 1283 + 41 77 925 2908

(வாட்ஸாப்பில் எழுத இவ்விரண்டையும் பயன்படுத்தவும்)

(C-2885)

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் தர்மகர்த்தா திரு.வேல்முருகன் அவர்களது அன்புத் தாயாரும் ஆலயத்திற்கு பல்வேறு வழிகளிலும் உதவிகளை நல்கும் திரு.கதிர்காமத்தம்பி அவர்களது பாசமிகு மாமியாருமான

அமரர் **சேனாதிராசா செல்லக்கண்டு**

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய மனோன்மணி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
கொக்குவில் கிழக்கு.
நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

(4105)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடிவதைகளுக்கு முற்றுப்புள்ளி கல்வி அமைச்சின் அதிரடி முடிவு!

(கொழும்பு)

**பகிடிவதை தொடர்பான புகார்களைப் பெறுவதற்காக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஒரு அதிகாரியை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

இது குறித்த நடவடிக்கையை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சகம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை துணை அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி, இந்த அதிகாரிகள் ஒவ்வொரு பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவின் கீழ் நியமிக்கப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்திய நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு, அனைத்துப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களும் உயர் மட்ட கலந்துரையாடலுக்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டம் அமைச்சர், பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் நடைபெறவுள்ளதாக மதுர செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த மாணவனின் சமீபத்திய மரணம் தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகள் குறித்தும் அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

மாணவனின் மரணத்திற்கு பங்களித்திருக்கக்கூடிய ஏதேனும் உளவியல் காரணிகளை மதிப்பிடுவதற்காக சுகாதார அமைச்சின் குழு விசாரணையைத் தொடங்கியுள்ளதாக அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும், இது தொடர்பில் விசாரணையை ஆரம்பிக்க ஏற்கனவே கம்போலா மருத்துவமனைக்கு ஒரு குழு அனுப்பப்பட்டுள்ளதாக மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


## மணமகள் தேவை

1993, இந்து, ஸ்வாதி, DOCTOR
பூர்வீகம் – நயினாதீவு, வதியுமிடம் – யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11646.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-132)
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1994, இந்து, மஹம், ENGINEER
பூர்வீகம் – காரைநகர், வதியுமிடம் – U.K
மணமகள் பதிவு இல: 11683.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-132)
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1995, இந்து, கார்த்திகை, TEACHER
பூர்வீகம் – பண்டத்தரிப்பு, வதியுமிடம் – அராலி
மணமகன் பதிவு இல: 11603.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-132)
www.EQMarriageService.com


## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பர்களான
திரு. வீ. பரமேஸ்வரன்
(பிரபல பொருளியல் ஆசிரியர், கொழும்பு.)
திரு. வீ. சாயீஸ்வரன்
ஆகியோரின் அன்புத் தாயார்
திருமதி. கமலாம்பிகை வீரசிங்கம்
(மண்டைதீவு-கொக்குவில்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

(இ)

பிரிவால் துயருறும்
நண்பர்கள்

## சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதத்தில் ஒரு இலட்சத்து 74 ஆயிரத்து 608 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அதன்படி, ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 8,96,884 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதேவேளை ஏப்ரல் மாதத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 38, 744 ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


## உதவியாளர் தேவை

யாழில் உள்ள பிரபல கட்டட நிறுவனம் ஒன்றிற்கு மேசன் மற்றும் மேசன் உதவியாளர் தேவை

- உணவு, தங்குமிடம் இலவசம்

077 862 0392, 076 200 4827

(4044)


## இராசிபலன்

04.05.2025
சித்திரை 21, ஞாயிற்றுக்கிழமை
பூசம் முன்னிரவு 6.21 மணிவரை

சப்தமி பிற்பகல் 1.16 மணிவரை
சுபநேரம் 8.56-10.26 மணிவரை
இராகுகாலம் 4.26-5.56 மணிவரை
அக்கினிநாள் ஆரம்பம்

சந்திராஷ்டமம்-மூலம், பூராடம்

வளவன்




நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், போசன சுகமுண்டு.




இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலன் கிடைக்கும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள்.




திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டில் ஆர்வம் காண வேண்டிய நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.




திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.




திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை விவாதங்கள் ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.




ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

ஓடுவதில் பயனில்லை, நேரத்தில் புறப்படுவதே சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கள்ளியடி பகுதியில் கோர விபத்து

## 12 பேர் படுகாயம்

(மன்னார்)

**மன்னார்-யாழ் பிரதான வீதி, கள்ளியடி பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற கோர விபத்தில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**





மன்னாரில் உள்ள ஆடை தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் பணியாளர்களை ஏற்றி வந்த தனியார் பேருந்து கள்ளியடி பகுதியில் பணியாளர்களை ஏற்றுவதற்காக வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த பேருந்துக்கு நேர் எதிரே அதி வேகமாக வந்த ஹன்டர் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த பேருந்துடன் மோதித் தள்ளியதுடன் வீதியில் மோட்டார் சைக்கிளில் நின்று கொண்டிருந்த ஒருவர் மீதும் மோதி பாரிய விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் நின்ற நபரும் காயமடைந்ததுடன்,அவரது மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது.

குறித்த விபத்தில் ஹன்டர் ரக வாகனத்தின் சாரதி, உதவியாளர் ஆகிய இருவர் மற்றும் ஆடை தொழிற்சாலை பணியாளர்கள் 9 பேரும் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் குறித்து இலுப்பைக்கடவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8-285)

# காணிகள் கபளீகரம் செய்வதை தடுத்து நிறுத்த

## சட்ட ஆலோசனை



(கரணவாய்)

வடமாகாணத்தில் 5940 ஏக்கர் காணிகள் கபளீகரம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தும் முகமாக இலவச சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்வு வெற்றிலைக்கேணியில் நேற்று முன்தினம் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 28. 03. 2025ஆம் திகதி இடப்பட்ட வர்த்தமானியிலே மேற்படி ஏக்கர் காணியினை மூன்று மாதத்திற்குள் உரிமை கோரப்படாதவிடத்தில் அரச காணியாக அபகரிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ். மாவட்டத்திலே 3669 ஏக்கர் காணி கபளீகரம் செய்யப்படவுள்ளதாகவும் இது வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குள் காணிகள் அடங்குவதனால் மக்களுக்கு சட்ட ஆலோசனை வழங்கலையும், எதிர்மனு விண்ணப்பம் முழுமைப்படுத்தும் வேலைத்திட்டத்தையும் சட்டத்தரணிகள் குழாம் முன்னெடுத்திருந்தனர்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் மக்கள் சந்திப்பிற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்த நிலையில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் உள்ளிட்ட பத்து வரையான சட்டத்தரணிகள் கலந்துகொண்டு மக்களுக்கான ஆலோசனைகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-60)

# வொலிபோல் போட்டியின்

## இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கலை ஒளி சனசமூக நிலையத்தின் 25 ஆவது வெள்ளி விழாவை முன்னிட்டு கலை ஒளி விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான வொலிபோல் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு கலை ஒளி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதவுள்ளது.

கலை ஒளி விளையாட்டுக் கழக தலைவர் இ.தயானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக தொழிலதிபர் ஞ.சகாயநாதன், சிறப்பு விருந்தினர்களாக புலம்பெயர் ஒன்றிய உறுப்பினர் பாலன் ஆனந்தராசா, அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.யு.பிரியந்த, யாழ் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க செயலாளர் சி.தயாபாலன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேச சபை உத்தியோகத்தர் என்.விநாயகமூர்த்தி, கலை ஒளி சனசமூக நிலையத்தின் தலைவர் செ.செல்வரூபன், முன்னாள் விளையாட்டுக்கழக தலைவர் க.கிருபாகரன், கலை ஒளி முன்பள்ளி தலைவர் சி.மயூரன் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர்.(6-8-90)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி முன்றலில் இடம்பெறவுள்ளது.

கணேச சனசமூக நிலையத் தலைவர் சி.செல்வஸ் கந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் அ.பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவை நலன் முகாமையாளர் நா.ரவீந்திரன் மற்றும் வடமாகாண LOLC நிறுவன உள்ளக கணக்கு ஆய்வாளர் இ.குமரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினராக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஓய்வுபெற்ற தலைமை பொறியியலாளர் ச.முருகநேசன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக கணேச முன்பள்ளி மற்றும் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (3-8)

## உயர்தரப் பெறுபேறுகளில்

# வடமாகாணத்தில் வவுனியா வடக்கு வலயம் முதலிடம்

(குருமன்காடு)

வெளியாகிய 2024 ஆம் ஆண்டு உயர்தரப் பெறுபேற்றில் வடக்கு மாகாணத்தில் வவுனியா வடக்கு வலயம் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது. வடமாகாணத்தில் 12 கல்வி வலயங்களில் இருந்தும் பரீட்சைக்கு முதல் தடவை தோற்றி சித்தி பெற்றவர்களின் வீதத்தைஅடிப்படையாகக் கொண்டு வடமாகாண கல்வி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் வெளியாகியுள்ளது.

அதன்படி, வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயங்களில் வவுனியா வடக்கு வலயத்தில் இருந்து முதல் தடவையாக 253 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் 189 பேர் சித்தி பெற்றுள்ளனர். அந்தவகையில் 74.7 சதவீதமானவர்கள் சித்தி பெற்று வடக்கில் முதலாவது இடத்தை பிடித்துள்ளனர்.

அத்துடன் 73.5 சதவீத சித்தியைப் பெற்று தென்மராட்சி வலயம் 2 ஆம், 70.5 சதவீத சித்தியைப் பெற்று மன்னார் வலயம் 3 ஆம், 70.1 சதவீத சித்தியைப் பெற்று யாழ்ப்பாண வலயம் 4 ஆம், 69.8 சதவீத சித்தியைப் பெற்று மடு வலயம் 5 ஆம், 69.4 சதவீத சித்தியைப் பெற்று தீவக வலயம் 6ஆம், 68.1 சதவீத சித்தியைப் பெற்று வலிகாமம் வலயம் 7 ஆம், 67.8 வீத சித்தியைப் பெற்று வவுனியா தெற்கு வலயம் 8 ஆம், 65.2 சதவீத சித்தியைப் பெற்று வடமராட்சி வலயம் 9 ஆம், 62.3 சதவீத சித்தியைப் பெற்று துணுக்காய் கல்வி வலயம் 10 ஆம், 60.6 சதவீத சித்தியைப் பெற்று கிளிநொச்சி தெற்கு வலயம் 11 ஆம், மற்றும், 55.4 சதவீத சித்தியைப் பெற்று 12 ஆம் இடங்களையும் முறையே கிளிநொச்சி வடக்கு வலயமும் பெற்றுக் கொண்டுள்ளது. (6-8-250)



அச்சுவேலி வடக்கு சரசாளி சித்திரவேலாயுதர் ஆலய கொடியேற்றத்தை ஒட்டி 'மிளிர்ந்தருள்பவனே' என்ற பக்தி பாடல் இறுவட்டு நேற்று முன்தினம் வெளியீடு செய்யப்பட்டது. இந் நிகழ்வில் பாடல் ஆக்கத்தில் பங்களிப்பு செய்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். (படம்:சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 491
04.05.2025
பக்கம் 07

# ஆதீன முதல்வரின் இறுதியாத்திரை

## உணர்த்தி நிற்கும் உண்மை அறிமினே!

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் 2025 மே மாதம் முதலாம் திகதி இரவு 9.45 மணியளவில் தேகவியோகம் அடைந்தார்.

மருத்துவச் சிகிச்சைக்காக கொழும்பு சென்று வெள்ளவத்தை கம்பன் கோட்டத்தில் தங்கியிருந்த வேளை, அவரின் உயிர் அமைதியாகப் பிரிந்தது.

கொழும்பிலிருந்து அவரின் உடல் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டு நல்லை ஆதீனத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் மணி ஐயர் என்று நாம் அன்போடு அழைக்கின்ற தம்பிரான் சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

சைவ சமயத்தின் ஒரேயொரு ஆதீனமான நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஈழத்து சைவ சமயத்தின் தலைமைத்துவமாக விளங்கியது.

ஆம், இலங்கையில் பௌத்தத்திற்கு அஸ்கிரிய-மல்வத்த பீடங்கள் போல, கத்தோலிக்கத்திற்கு கொழும்பு கர்தினால் போல, சைவ சமயத்திற்கு நல்லை ஆதீனமே தலைமையாயிற்று.

பொதுவில் இறைவழிபாட்டில் எந்தக் கட்டுப்பாடுகளுக்கும் இடமிருக்கக்கூடாது.



எந்த நிர்வாகக் கட்டமைப்புக்களும் இறை வழிபாட்டுக்குத் தேவையல்ல என்ற தத்துவசாரத்தைக் கொண்டுள்ள சைவசமயம் வேதாந்த, சித்தாந்த தத்துவங்களினூடு இறை பரம்பொருளை உணர்வதற்கான வழிவகைகளை வகுத்துள்ளது.

இதையும் கடந்து, கடவுளைக் கடிந்தும் கண்டித்தும் வழிபடும் அளவில் உலகில் எந்தச் சமயத்திலும் இல்லாத சுதந்திரத்தை சைவ சமயம் தந்துள்ளது.

இத்தகு சுதந்திரத்தின் நோக்கமெல்லாம் மெய்ஞானத்தை எய்துவதேயன்றி, வேறில்லை என்பது புரிதற்குரியது.

எனினும் அரச கட்டமைப்புக்களும் நிறுவனமயப்பட்டுள்ள இதர சமயங்களின் போக்குகளும் சைவ சமயத்திற்கான தலைமையை வலியுறுத்தி நிற்கிறதென்னும் உண்மையை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இந்த வகையில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனமே எங்களின் சைவ சமயத்தின் தலைமைப் பீடமாயிற்று.

ஆம், யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற இந்த நாட்டின் ஆட்சித் தலைவர் கள், அரசியல் தலைவர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் நல்லை ஆதீனத்திற்குச் சென்று குரு முதல்வரைச் சந்திக்கத் தவறுவதில்லை.



அந்த வகையில், ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரம சிங்க ஆகியோர் நல்லை ஆதீன முதல்வரை சந்தித்திருந்தனர்.

இதில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் காலத்தில் நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்திருந்தார். இச் சந்திப்பின் போது நல்லைக் குருமுதல்வருடன் பிரசன்னமாகி இருந்த கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள், காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகளை நினைந்து அவர்களின் பெற்றோர் படுகின்ற வேதனையை எடுத்துக்கூறிய போது, அநுரகுமார திஸாநாயக்க அவர்கள்; தனது சொந்தச் சகோதரன் காணாமல் ஆக்கப்பட்ட கதையைக் கூறி, அதனால் தன் தாய் பட்ட வேதனை எத்துணை என்பது தனக்கு நன்கு தெரியும் எனக் கூறியிருந்தார்.

பின்னாளில் அவர் ஜனாதிபதியாகி கூட்டங்களில் பேசுகின்ற போது; காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் படுகின்ற துன்பத்தை நான் நன்கு அறிவேன். அதன் வலியை அனுபவித்தவன் நான் என்று கூறுவதற்குள் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற சந்திப்பின் தாக்கம் தெரிகிறது.

இவ்வாறாக, அனைவரும் சந்தித்து ஆசிபெற்ற நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தேகவியோகம் அடைந்த போது, இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் என எவரும் அனுதாபச் செய்திகளை பகிர்ந்து கொள்ளாமல் மௌனம் சாதித்தனர். இங்குதான் இலங்கைத் திருநாட்டின் சைவ சமயத்திற்கான அங்கீகாரம் எவ்வாறாக உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

உண்மை. இந்த நாட்டின் பௌத்த பீடாதிபதி அல்லது அவர்களுக்கு இணையான பௌத்த துறவிகள் இறந்திருந்தால் நாட்டில் துக்கதினம் அறிவிக்கப்பட்டிருக்கும்.

கொழும்பு கர்தினாலுக்கு ஒன்றென்றால் நாட்டின் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறந்திருக்கும்.

மாவட்ட ஆயர்களுக்கு ஏதேனும் என்றால் ஜனாதிபதியோ அன்றி பிரதமரோ அல்லது அவர்களின் விசேட பிரதிநிதிகளோ நேரில் சென்று அஞ்சலி செலுத்தியிருப்பர்.

ஆனால் எங்கள் நல்லை ஆதீனக் குருமுதல்வர் இயற்கை எய்திய போது எதுவுமே இல்லாத வெறுமை.

அதிலும் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறை மாவட்ட ஆயர்கள், தென்னிந்திய திருச்சபைப் பேராயர்கள் நல்லை ஆதீன முதல்வருக்கு அஞ்சலி செலுத்தத் தவறியதுதான் வேதனையிலும் வேதனை.

இவ்வாறு வேதனைப்படுவதற்கு காரணமும் உண்டு. ஆம், எத்தனையோ விமர்சனங்களைத் தொடர்ந்து-ஆதீன மரபை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு யாழ் ஆயரின் இல்லம் சென்று சந்திப்புக்களை நடத்திய- பேராயர் அம்பலவாணரின் இறுதி நிகழ்வில் பங்கேற்றப் பெருந் தன்மையின் தலைவனாக விளங்கிய நல்லை ஆதீன முதல்வரின் இறுதி நிகழ்வில் ஆயர்கள் கலந்து கொள்ளவில்லை என்பது மனவேதனைக்குரியதே.

பரவாயில்லை. குருமுதல்வரின் இறுதி நிகழ்வின் போதாயினும் யாழ்ப்பாணப் போக்குவரத்துப் பொலிஸார் வீதி ஒழுங்குகளை பேணுவதற்கேனும் உதவியிருக்கலாம். ஆனால் அதற்குக் கூட சைவ சமயம் தகுதியற்று போயிற்று.

இந்த நிலையில் இந்த நாட்டில் ஐந்து சதத்திற்கும் மதிக்கப்படாத நம் சிவாச்சாரியர்களில் சிலர் சில இடங்களில் காளாஞ்சி கொடுப்பதற்கும் பொன்னாடை போர்ப்பதற்கும் முண்டியடிப்பதைப் பார்க்கும் போதுதான் எம் கண்கள் குளமாகிப் போகின்றன.

■ விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தேகவியோகம் அடைந்துவிட்டார்.

அவரின் ஆத்ம ஈடேற்றப் பிரார்த்தனைக்காக இறை தியானம் செய்வோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவழிபாடு செய்து அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க, விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** நல்லை ஆதீன சுவாமிகளின் உடல் நல்லூர் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்பட்ட போது நேரம் மாலை 6 மணி 50 நிமிடம்.

குறித்த செம்மணி மயானம் நல்ல முறையில் பேணப்பட்டு வருகிறதாயினும், மின்சார வசதி இல்லாதது ஒரு பெரும் குறையாக இருந்தது.

எனவே செம்மணி மயான பரிபாலன சபையினர் மின்சார வசதியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு இந்த இடத்தில கேட்டுக் கொள்கிறன்.

**சாத்திரியார்:-** விதானையார் சொல்லுறது உண்மைதான். பொதுவில மயானங்கள் வெளிச்சமாக இருக்கிறது நல்லது.

அதிலும் பொது மக்கள் பயணம் செய்கின்ற வீதிகளை அண்மித்திருக்கிற மயானங்கள் வெளிச்சமாக இருந்தால், இரவுப் பொழுதில் அந்தப் பாதையால செல்கின்ற பொதுமக்கள் அச்சமில்லாமல் அந்த



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

வீதியால பயணிப்பினம்.

உண்மையில இரவு வேளைகளில செம்மணி மயானம் அமைந்த வீதியால பயணிக்கிறவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவு எண்டு தான் சொல்ல வேணும்.

இதற்குக் காரணம் அந்த மயானப் பகுதி



## மருத்துவர்கள் ஆகும் வாய்ப்பு 20 பேருக்கு இல்லாமல் போனது

இருளாக இருப்பதால ஏற்படுகிற அச்சம் தான்.

ஆகையால செம்மணி மயானத்திற்கான மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்வதில சில தாமதம் ஏற்பட்டாலும் மயானம் உள்ள இடத்தில பிரகாசமான தெரு லைற்றைப் பொருத்தினால் கூட, மயான இருளை அகற்ற முடியும்.

இந்த விடயத்தில சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பினம் என நம்புவம்.

இவ்வாறு சாத்திரியார் கூற, ஆலடி அமைதியாகியது.

அந்நேரம் வாத்தியார் வைத்திலிங்கம் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார்.

இதை அவதானித்த கங்காணி கார்த்திகேயன், என்ன வாத்தியார் கடுமையாக யோசிக்கிறியள் என்ன சங்கதி.

**வாத்தியார்:-** தனிப்பட்ட யோசனையல்ல. எல்லாம் எங்கட இனத்தின்ர யோசனை தான்.

**கங்காணி:-** என்ன வாத்தியார் சொல்லுறியள். கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**வாத்தியார்:-** 2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில வெளியாகியதல்லோ. அதில கடந்த வருடத்தோட ஒப்பிடும் போது, 2024 ஆம் ஆண்டில மருத்துவ பீடத்திற்குச் செல்கின்ற மாணவர்களில யாழ்.மாவட்டத்தில 20 பேர் குறைவடைந்திருக்குது.

அதாவது எங்கட 20 பிள்ளைகளுக்கு மருத்துவபீடம் செல்கின்ற வாய்ப்பு இல்லாமல் போயிருக்கு. ஆகையால இது ஒரு சாதாரண விடயம் இல்லைத் தானே!.

**மூப்பர்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** மூப்பர், 2024 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பிரிவுப் பெறுபேறுகள் இந்த முறை யாழ். மாவட்டத்தில கடும் வீழ்ச்சி கண்டிருக்குது.

இதால எங்கட பிள்ளைகள் மெரிட்டில சித்தியடைந்த எண்ணிக்கை மிகக் குறைவாகியதால, தனித்து கோட்டா அடிப்படையிலான பல்கலைக் கழக அனுமதிதான் எங்கட பிள்ளைகளுக்குக் கிடைத்திருக்குது.

அதிலும் சனத் தொகைக் கணக்கெடுப்பில எங்கட யாழ்.மாவட்ட சனத்தொகை வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கூறி, கோட்டா அடிப்படையில்- மருத்துவத்துக்கான பல்கலைக்கழக அனுமதியில மூன்று இடங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இதாலும் மருத்துவ பீடம் செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை இருபதால குறைவடைந்துள்ளது.

**சிறாப்பர்:-** வாத்தியார், இதுக்கு என்ன காரணம்.

**வாத்தியார்:-** உண்மையைச் சொல்லப் போனால், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின்ர விஞ்ஞான, கணிதப் பெறுபேறுகள் எங்கட யாழ்.மாவட்டத்தைக் காப்பாற்றியிருக்குது.

மற்றும்படி ஏனைய பாடசாலைகளின்ர பெறுபேறுகள் வீழ்ச்சி கண்டுள்ளன. அதிலும் வெளிப்படையாகக் கூறவேணும் எண்டால், எங்கட யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின்ர பெறுபேறு கணிசமாக வீழ்ச்சி கண்டுள்ளன.

எல்லாப் பிள்ளைகளும் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில சித்தியடைந்தவர்கள். அதிலும் 100 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் ஒன்பது பாடத்திலும் "ஏ" சித்தி பெற்றவர்கள். நிலைமை இவ்வாறாக இருந்தும் வேம்படி மகளிர் கல்லூரியின்ர உயர்தரப் பெறுபேறு வீழ்ச்சிகண்டுள்ளது என்பதை ஒரு சாதாரண விடயமாக எடுக்கக் கூடாது.

ஒரு சரியான குழுவை அமைத்து விசாரணை நடத்துவதற்கு வட மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேணும்.

**விதானையார்:-** கைப் புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு.

**பண்டிதர்:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** எங்கட வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின்ர கல்விப் பணிப்பாளராக இருந்த ஒருவர், தன்ர தனிப்பட்ட விடயங்களுக்காக தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்துகிற பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றக் கூடாது என சட்டம் போட்டார்.

அவர் போட்ட சட்டத்தை அந்த நேரம் வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்தவர் நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்.

அதேநேரம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன் தற்துணிவோடு மாணவர்களுக்கு எது தேவையோ அதைத் தான் நான் நடைமுறைப்படுத்துவேன் எனக் கூறி யாழ். இந்துக் கல்லூரியில தொண்டைமானாறு வெளிக்கள நிலையப் பரீட்சையை நடத்தினார்.

அதன் விளைவாக அந்தக் கல்லூரி மாணவர்கள் கணித, விஞ்ஞானத்துறைகளில உச்சமான பெறுபேறுகளைப் பெற்றனர்.

மாறாக, மாகாணத் திணைக்களத்தின்ர பரீட்சையோட மட்டும் நிண்ட வேம்படி மகளிர் கல்லூரியால உயர்ந்த பெறுபேறுகளைப் பெற முடியாமல் போயிற்றுது.

என்ன செய்யிறது. மாகாணக் கல்விப் பணிபாளராக இருந்தவர் எங்கட பிள்ளைகளின்ர தலையில மண்ணைக் கொட்டிப் போட்டுப் போயிற்றார்.

இனியாவது எங்கட கல்வித் திணைக்களங்கள் அதிபர்கள் சுயமாக இயங்குவதற்கு இடம் கொடுக்க வேணும். இதை விட்டிட்டு எல்லாத்தையும் நாங்கள் தான் செய்ய வேணும் எண்டு நினைத்தால், அது எங்கட பிள்ளைகளின்ர எதிர்கால வாழ்க்கையில தான் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அதேநேரம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்குப் புதிதாக வந்துள்ள அதிபர் தற்துணிவோட செயலாற்றுவார் எண்ட நம்பிக்கை எல்லாரிட்டையும் இருக்குது.

இவ்வாறு விதானையார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடாமுயற்சி, விவேகம், வீரம், விசுவாசம், துணிவு இதில் மிக முக்கியமானது எது வியாசரே?

அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

076 097 3126

என்ற இலக்கத்திற்கு SMS, Whats App செய்யுங்கள்




அரசியல் பற்றியும் அரசியல்வாதிகள் பற்றியும் உங்கள் கருத்து என்ன வியாசரே?

**வியாசர் அவர்களே, பூனைக்கும் நாய்க்கும் என்ன வித்தியாசம்?**

*சிவம்-வதிரி*

பூனை சிறிதாக இருக்கும். நாய் பெரிதாக இருக்கும். பூனை மியாவ் என்று கத்தும். நாய் வள் என்று குரைக்கும்.

பூனை கண்டதிலும் வாய் வைக்கும். நாய் தனக்குரிய பாத்திரத்தில் மாத்திரமே உண்ணும்.

பூனை எலியைப் பிடிக்கும். நாய் அணிலைக் கலைக்கும். பூனை ஆட்களுக்குள் ஒழிக்கும். நாய் ஆட்களைக் கடிக்கும்.

சிவம் இந்த வித்தியாசங்கள் போதுமா இன்னும் ஏதும் கூறவா?

**அரசியல் பற்றியும் அரசியல்வாதிகள் பற்றியும் உங்கள் கருத்து என்ன வியாசரே?**

*ரிதுஷ்-யாழ்ப்பாணம்*

அரசியல் ஒரு சாக்கடை என்று பலர் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனாலும் அது சாக்கடையிலும் மோசமானது என்பதை இப்போது உணர்ந்திருக்கிறேன்.

எமது தமிழ் அரசியல்வாதிகளுக்கு தேர்தல் நேரங்களில் மாத்திரமே வீரம் வரும். கூடவே அந்தக் காலங்களில் தான் அவர்களுக்கு சேவை மனப்பாண்மை மேலோங்கும்.

தமது அரசியல் ஆதாயங்களுக்காக எவ்வளவு பொய்கள் கூற முடியுமோ அவ்வளவு பொய்களைக் கூறி விடுவார்கள்.

தெற்கிற்கு தலையையும் வடக்கிற்கு வாலையும் காட்டும் விலாங்குகளை என்னவென்று கூறி விட.

**பிள்ளையைப் பிரம்பால் அடியாமல் விடாதே? இது குறித்து வியாசரின் கருத்தென்ன?**

*குமார்-யாழ்ப்பாணம்*

தனது ஆசிரியரிடம் அடிவாங்காமல் ஒருவன் வாழ்வில் மேலே வந்திருப்பான் என்றால் அந்த வளர்ச்சி வளர்ச்சியே இல்லை.

கண்டிப்பு என்பதே நல்ல மனிதர்களை உருவாக்கும். கண்டிப்பு இல்லாத இடம் சுமூகமாக இருக்கும். ஆனால் அங்கு எந்த உருவாக்கமும் நடைபெறாது என்பதே உண்மை.

பிள்ளைக்கு பெற்றோர் அடித்தால் பிரச்சினை என்றால் எதைச் செய்து விட முடியும்.

கண்டிப்பு இல்லாத பிள்ளை வளர்ப்பு முறையே தற்போதைய அவலச் சாவுகளுக்கு மூல காரணம்.

**விடாமுயற்சி, விவேகம், வீரம், விசுவாசம், துணிவு இதில் மிக முக்கியமானது எது வியாசரே?**

*பிரவீன்ஸ்-பருத்தித்துறை*

அனைத்தின் ஒட்டுமொத்த உருவமாய் பத்மபூஷன் அஜித்குமார் நிமிர்ந்து நிற்கிறாரே.

**எம்மிடம் பெரிய பெரிய சட்டத்தரணிகள் இருந்தும் எமது அபிலாசைகளைப் பெறமுடியாது போனது ஏன் வியாசரே?**

*இராசதுரை-மந்துவில்*

நாம் தான் கஞ்சாவுடன் பிடிபட்டவர்களையும் கசிப்பு காய்ச்சுபவர்களையும் கள்ள மணல் காரர்களையும் கொலையாளிகளையும் வெளியே கொண்டு வரும் மிகச் சிறந்த வேலையைச் செய்கிறோமே.

இதை விட வேறு எதைச் செய்யச் சொல்லுகிறீர்கள். தமிழ் மக்கள் நாங்கள் கூறுவதை நம்பும் முட்டாள்கள். ஆதலால் நாம் எதையும் செய்வோம்.

தேர்தல் நேரத்தில் மேடையேறி தேசியம் பேசுவோம். அதற்குள் சகலதும் அடங்கி விடும் ஓகே.




**காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு எனச் சொல்வதேன்?**

*மகாலட்சுமி-கொக்குவில்*

கறுப்பு அழகு இல்லை என்பதை இந்தப்பழமொழி முன்நிறுத்தியிருக்கிறது. இது தவறான விடயம்.

காகம் கறுப்பாக இருந்தாலும் தன் குஞ்சுகளில் அன்பாக இருக்கும். உணவு கொடுத்து வளர்க்கும். என்பதையே இந்தப் பழமொழி சுட்டி நிற்கிறது.

உண்மையில் அழகு என்பது தனித்துவமானது. அதை நிறத்தை வைத்து கணித்து விட முடியாது. மனிதரைத் தவிர வேறு எந்த [illegible] இல்லை இதுவே உண்மை.

**முந்திவந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைக்குதாம் என்கிறது போல அண்மையில் அரசுக் கட்சியின் கூட்டம் நடந்ததே?**

*ராஜ்-வதிரி*

உட்கட்சிப் பூசல் கட்சியையே சுக்கு நூறாக்கி விட்டது. அது யானை தன் தலையில் மண் அள்ளிப் போட்ட கதையாய் போன பின்பு கூட, இல்லை நான் இப்படித்தான் நடப்பேன் என்று அடம்பிடித்தால், கெடுகுடி சொற்கேளாது எனும் பழமொழியைக் கூறுவதை விட வேறு எதைக் கூறி விட முடியும்.

ஒன்று மட்டும் உண்மை. உங்கள் கட்சியை கெட்டுக் குட்டிச்சுவராக்க வெளியில் இருந்து வேறு யாரும் வரத்தேவையில்லை. அந்த வேலையை நீங்களே மிகச் சிறப்பாக செய்வீர்கள், செய்கீறிர்கள் மிஸ்டர்......

**தமிழ் மக்களை தமிழ் கட்சிகள் ஏமாற்றினரா? தமிழ் கட்சிகளை சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றினரா வியாசரே?**

*சுதன்-குப்பிழான்*

தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுக்க, தமிழினத்துக்கு பேரினவாதம் செய்த துரோகத்திற்கு முடிவுகட்ட, எமது நிலம், வளம் சுரண்டப்படாமல் இருக்க, தமிழ் தேசியம் காக்க எமக்கு வாக்களியுங்கள் என்று கூறி தமிழ் அரசியல் கட்சிகள் தமிழினத்தை ஏமாற்றின.

எமக்கு ஆதரவு தாருங்கள் நாம் வென்ற பின் உங்களை அப்பிடி கவனிப்போம், இப்படிக் கவனிப்போம் என்று கூறி எமது தமிழ் கட்சிகளை நம்ப வைத்து கழுத்தறுத்தது சிங்கள ஆட்சியாளர்கள்.

இதில் கமுக்கமாய் இருந்து கோடி கோடியாய் பணம் சேர்த்தவர்களும் உள்ளனர். அது பற்றி இவ்விடத்தில் பேசவில்லை.

**மதுப்பிரியர்கள் பொது இடங்களில் கெட்ட வார்த்தைகளைப் பிரயோகிக்கிறார்களே வியாசரே?**

*சாயிசெல்வம்-பருத்தித்துறை*

1993 ஆம் ஆண்டு ஏதோ ஒரு தேவைக்காக பொறகாலத்தவர்களின் பாசறைக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது.

உள்ளே போகும் போதே ஒருவர் பெரிய அண்டா ஒன்றில் முட்டைப்பொரியல் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

எனது அலுவல் முடித்து விட்டு வரும் போது அதே அண்டாவில் முட்டைப் பொரியலைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

பொறுப்பாளியிடம் ஏன் என்று வினாவினேன். இன்று எமக்கு பொரித்த முட்டையில் உப்பு கூடிவிட்டது. அதை என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த பொழுது பெண்ணுடன் சேட்டை விட்டதாக ஊர்மக்கள் இவரைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். அதுதான் உப்புக்கூடிய முட்டைப் பொரியலை சாப்பிட விட்டிருப்பதாகக் கூறிச் சிரித்தார் அவர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## அன்புடன் வாழ



அன்பினை விதைக்க
ஆயுத வேலி வேண்டாம்
வேதனை தரும் போதனை
போதையிலும் கொடிது
வன்முறை வார்த்தைகள்
துன்பத்தின் திறவுகோள்
பண்புறு வார்த்தைகள்
இன்பத்தின் ஊற்று
எண்ணங்கள் வண்ணமுற
நியாயங்களை
நிராகரிக்காதீர்கள்
இனங்கள் இன்புற
நீதியை
அங்கீகரிப்போம்
எங்கனும் அமைதி பெற்று
எங்கள் உள்ளத்தில்
அன்பினை விதைத்து
அன்புடன் வாழ
ஒன்றிணைவோம்.

**கலாபூஷணம் தமிழினியன்,**
**பரந்தாமன் வவுனியா.**

## பொக்கிஷக் கவிதை

15.10.1966ஆம் ஆண்டு
மல்லிகை இதழில்
வெளியான கவிதை

## பழகு தமிழ்ப் பாட்டு



பாட்டு வந்தது
பாடி நின்றனன்!
கேட்ட அங்குளோர்
கிட்ட வந்தனர்.

பண்டு கற்றநூற்
பண்டி தத் தமிழ்
கொண்டு பாட்டுக்கள்
கூறி நின்றனன்

பிழை உணர்ந்தனன்!
பின்பு முன்பு போல்
பழகு மென்தமிழ்
பாடி நின்றனன்!

அண்டி நின்றிடும்
ஆள் மிகுந்தனர்
மண்டை வீங்கிட
மமதை கொண்டனன்!

சூழ - நின்றவர்
துய்த்து நின்றவர்
வாழை நீரென
வழுகி ஓடினர்!

அங்கு வந்தவர்
அருகில் வந்தனர்!
"தங்கம்" என்றனர்,
தழுவி நின்றனர்!

**ச.வே.பஞ்சாட்சரம்**


அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...
☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர்,
முகவரி, தொலைபேசி இலக்கம்
என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


## மதம் மனிதனின் நட்புக்குத் தடையா?



வானத்திலே விரைந்த
விமானமொன்றை ஏனோ
வட்டமாய்ச் சுழன்றலைய உள்ளிருந்தோர்
தானசைந்தே பதறிப் பயந்து சோகமுற
தானியங்கு பரசூட் குடைகொண்டு
வீணபத்தம் நேராமல் பூமிக்கே பயணிகளை
விரைந்தே அனுப்பிவிடும் போதினிலே
காணுகின்ற இணைபிரியா
நண்பரெனும் இருவரங்கே
கண்கலங்கி ஒன்றாகப் பூமி சென்றார்
காடுநிறை மண்ணதிலே
வீழ்ந்துவிட்ட இருவருமே
கடுமையுள துன்பங்களைக் கலங்காமல்
வீடுசெல்லும் ஆசையிலே சேர்ந்தே அனுபவித்து
விடியலாய் நகரமதைத் தானடைந்தார்
ஓரிடமும் ஓயாது ஒற்றுமையாய் நின்றே
ஓங்கிய நட்புப் பிணைப்புடனே
பேரிடரில் போராடி வென்றிட்ட நண்பர்கள்
பெரிதும் வருந்தவில்லை ஒற்றுமையால்
நாடுதனில் வெவ்வேறு மணியோசை அங்கு
நாகரிக மனிதர்கள் விரைகின்றார்
காடுதனில் கைகோர்த்து மீண்ட இருவரிலே
காணுகின்ற யேசுவிடம் ஒருவனும்
தேடியே சிவனிடம் மற்றவனும் சென்றே
தெளிவாகத் தம்மதங்கள் பற்றுகின்றார்
ஓடிய நண்பர்களின் நட்பதனை மதங்களங்கே
ஒட்டாத வேற்றுமையால் பிரித்துவைக்க
கூடிக் களித்த ஒற்றுமையே வெற்றிதந்தும்
நாடிய மதங்களினால் பிரிந்தோரை
ஈடில்லா வாழ்வுக்கு வழிகாட்டும் முழுமுதலாம்
இறைவன் பார்த்தே சிரித்துக்கொண்டான்...!!

**இரா.தில்லைராஜன்**

## எது ஆளுமை?



அழுகின்ற பிள்ளைக்காய்
அணைத்தூட்டும் தாய்மையில்
இணைக்கின்ற சுகம் ஆளுமை - இங்கு
விழுகின்ற மனிதர்க்கும்
விரைந்திங்கு வருகின்ற
மரணத்தின் வகை ஆளுமை

உழுகின்ற உழவர்க்கும்
உற்பத்தி பெருக்கின்ற
சித்திக்கு வித்தென்பதா? - இதயம்
அழுகின்ற போதெல்லாம்
உதிக்கின்ற மதிதன்னை
தேற்றிடும் சுகம் ஆளுமை

வெண்ணிலவின் தண்ணொளியை
விஞ்சிடும் பெண்ணெழிலில்
கொஞ்சு மெழில் ஓர் ஆளுமை - மாந்தர்
தண்ணிலவில் கால்பதித்து
புவிமீது மீண்ட கதை
மதிகொண்ட மனதாளுமை

கவிதைக்கு கருவாகி
கருவுக்குள் உருவான
பொருளிங்கு பெரும் ஆளுமை - நல்ல
மனிதர்க்குப் பண்பாடு
வாய்மையாம் சால்புண்டேல்
தூய்மையாம் அது ஆளுமை



**வளவை வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராணுவக் கட்டமைப்பு

# இந்தியா – பாகிஸ்தான்

# பலம் யாரிடம்?

BBC Tamil

**“ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கர வாதத் தாக்குதலுக்குப் பிறகு இந்தியா, பாகிஸ்தான் இடையிலான பதற்றம் உச்சத்தில் உள்ளது.**

இரு நாடுகளுக்கும் இடையிலான சிந்துநதி ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்தல், அட்டாரி - வாகா எல்லையை மூடுவது, பாகிஸ்தான் குடிமக்களின் விசாக்களை ரத்து செய்வது போன்ற பல முடிவுகளை இந்தியா எடுத்தது.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக பாகிஸ்தான் 1972ஆம் ஆண்டு கையெழுத்தான சிம்லா ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தது. மேலும் நதிகளின் நீரைத் தடுக்கவோ அல்லது திசை திருப்பவோ செய்யும் எந்த முயற்சியும் “போர் நடவடிக்கையாக” கருதப்படும் என்றும், அதற்கு முழுப் பலத்துடன் பதிலடி கொடுக்கப்படும் என்றும் பாகிஸ்தான் அரசு தெரிவித்தது.



இரு நாடுகளின் அரசியல் தலைமையும் பரஸ்பரம் பதிலடி கொடுக்கும் விதமாகக் கடுமையான எச்சரிக்கைகளையும், காட்டமான கருத்துகளையும் தெரிவித்து வருகின்றனர்.

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு முதல் முறையாக பொது மக்கள் மத்தியில் பேசியபிரதமர் நரேந்திர மோடி, “இந்தத் தாக்குதலுக்குக் காரணமான தீவிரவாதிகள் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மோசமான தண்டனையைப் பெறுவார்கள்” என்றார்.

“ஒவ்வொரு தீவிரவாதியையும், அவர்களுக்கு ஆதரவளிப்பவர்களையும் இந்தியா அடையாளம் கண்டு தண்டிக்கும் என்ற செய்தியை நான் முழு உலகுக்கும் தெரிவிக்கிறேன். எஞ்சியுள்ள தீவிரவாதிகளை மண்ணோடு மண்ணாக அழிக்கும் நேரம் தற்போது வந்து விட்டது” என்றும் மோடி குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப், இந்தியாவின் எந்தவொரு நடவடிக்கைக்கும் வலுவான பதிலடி கொடுப்பதாகத் தெரிவித்த அதே வேளையில், பாகிஸ்தானின் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப், “சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் போர் அறிவிப்பாகக் கருதப்படும்” என்று வலியுறுத்தினார்.

“பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் கொண்ட ஒரு நாடு. இந்தியா ஏதேனும் இராணுவ நடவடிக்கை எடுத்தால், அதற்குப் பதிலடி கொடுக்கும் அளவுக்குப் போதுமான ஆயுதபலம் பாகிஸ்தானிடம் இருக்கிறது” “ஏவுகணைகள், ட்ரோன்கள், விமானப்படை என எதுவாக இருந்தாலும், எந்த இழப்புமின்றி பதிலடித் தாக்குதலை நடத்தத் தேவையான தொழில்நுட்பத்திறன் இந்தியாவிடம் இல்லை.

ஆனால் பதிலடி கொடுக்கும் திறன் பாகிஸ்தானுக்கு உள்ளது. ஆகையால் நாம் அதற்குத் தயாராக இருக்க வேண்டும்” என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் இராணுவத்தின் தயார் நிலை குறித்து, அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப் கூறுகையில், “நாங்கள் இனிமேல்தான் தயாராக வேண்டும் என்றில்லை. ஏற்கனவே தயார் நிலையில்தான் இருக்கிறோம். எந்தச் சூழ்நிலைக்கும் நாங்கள் தயாராகவே இருக்கிறோம்,” என்றார்.

இராணுவ வலிமை குறித்த 2025 ஆம் ஆண்டுக்கான தரவரிசையில் பாகிஸ்தான் இந்தியாவைவிட 8 இடங்களில் பின்தங்கியுள்ளது என்று குளோபல் ஃபயர் பவர் இணையத்தளத்தில் உள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

உலகளாவிய இராணுவச் சக்தியைப் பொறுத்தவரை, 2025ஆம் ஆண்டில் 145 நாடுகளில் இந்தியா 4ஆவது இடத்தில் இருக்கிறது, பாகிஸ்தான் 12ஆவது இடத்தில் இருக்கிறது.

இந்திய இராணுவத்திடம் சுமார் 22 லட்சம் இராணுவ வீரர்கள், 4,201 டாங்கிகள், 1.5 லட்சம் கவச வாகனங்கள், 100 சுயமாக இயக்கப்படும் பீரங்கிகள் மற்றும் 3,975 இழுத்துச் செல்லக்கூடிய பீரங்கிகள் உள்ளன.

இதுதவிர, 264 பீப்பாய் ரொக்கெட் பீரங்கிகளும் இருக்கின்றன.

இந்திய விமானப் படையில் 3 லட்சத்து 10 ஆயிரம் விமானப்படை வீரர்கள், 513 போர் விமானங்கள், 270 போக்குவரத்து விமானங்கள் உட்பட மொத்தம் 2,229 விமானங்கள் இருக்கின்றன. மொத்த விமானங்களில் 130 தாக்குதல் விமானங்கள், 351 பயிற்சி விமானங்கள், 6 டேங்கர் கடற்படை விமானங்கள் ஆகியவை அடங்கும்.

இந்திய இராணுவத்தின் மூன்று பிரிவுகளும் வைத்திருக்கும் மொத்த ஹெலிகாப்டர்களின் எண்ணிக்கை 899. அவற்றில் 80 ஹெலிகாப்டர்கள் தாக்குதல் நடத்த வல்லவை.

இந்திய கடற்படையில் 1.42 லட்சம் கடற்படை வீரர்கள் உள்ளனர். மேலும் 2 விமானம் தாங்கிக் கப்பல்கள், 13 டெஸ்டிராயர் எனப்படும் அழிக்கும் கப்பல்கள், 14 போர்க் கப்பல்கள், 18 நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 18 சிறிய போர்க் கப்பல்கள் உட்பட மொத்தம் 293 கப்பல்கள் உள்ளன.

தளவாட வசதிகளைப் பொறுத்தவரை, இந்திய இராணுவத்திடம் 311 விமான நிலையங்கள், 56 துறைமுகங்கள், 6.3 மில்லியன் கிலோமீற்றர் நீளத்திற்கு சாலைகள் மற்றும் 65,000 கிலோமீற்றர் ரயில் பாதைகள் இருக்கின்றன.

குளோபல் ஃபயர் பவர் இணையத்தள தரவுகளின்படி, பாகிஸ்தான் இராணுவத்தில் சுமார் 13.11 லட்சம் இராணுவ வீரர்களும், 1.24 லட்சம் கடற்படை வீரர்கள் மற்றும் 78 ஆயிரம் விமானப்படை வீரர்கள் உள்ளனர்.

பாகிஸ்தானிடம் மொத்தம் 1,399 விமானங்கள் உள்ளன, அவற்றில் 328 போர் விமானங்கள், 90 தாக்குதல் வகைகள், 64 போக்குவரத்து விமானங்கள், 565 பயிற்சி விமானங்கள், 4 விமானம் தாங்கி கப்பல்கள், தாக்குதல் நடத்தவல்ல 57 ஹெலிகாப்டர்கள் உட்பட 373 ஹெலிகாப்டர்கள் ஆகியவை அடங்கும்.

மேலும் அந்நாட்டு இராணுவத்திடம் 2,627 டாங்கிகள், 17,500 வாகனங்கள், 662 சுயமாக இயக்கப்படும் பீரங்கிகள், 2,629 இழுத்துச் செல்லப்படும் பீரங்கிகள் மற்றும் 600 மல்டிபேரல் ராக்கெட் பீரங்கிகள் ஆகியவை இருக்கின்றன.

பாகிஸ்தான் கடற்படையிடம் 9 போர்க்கப்பல்கள், 9 சிறிய போர்க் கப்பல்கள் , 8 நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 69 ரோந்து கப்பல்கள் உட்பட மொத்தம் 121 போர்க் கப்பல்கள் உள்ளன.

தளவாடங்களைப் பொறுத்தவரை, பாகிஸ்தானிடம் மூன்று துறைமுகங்கள், 116 விமான நிலையங்கள் மற்றும் 60 வணிகக் கப்பல் படை மட்டுமே இருக்கின்றன. இது தவிர, 2 லட்சத்து 64 ஆயிரம் கிலோமீற்றர் சாலைகளும் 11 ஆயிரத்து 900 கிலோமீற்றர் ரயில் பாதைகளும் பாகிஸ்தானிடம் உள்ளன.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு சிந்தனைக் குழுவான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) 2024ஆம் ஆண்டுக்கான அறிக்கைப்படி, இந்தியாவில் 172 அணு ஆயுதங்களும், பாகிஸ்தானிடம் 70 அணு ஆயுதங்களும் இருக்கின்றன.

இருப்பினும், இரு நாடுகளும் எத்தனை அணு ஆயுதங்களை நிலை நிறுத்தியுள்ளன என்பது தெளிவாக இல்லை.

“இந்தியாவை எதிர்கொள்ள பாகிஸ்தான் அணு ஆயுதங்களை உருவாக்கி வருகிறது. அதே நேரத்தில், இந்தியா நீண்டதூர ஆயுதங்களை நிலை நிறுத்துவதில் கவனம் செலுத்துகிறது. அதாவது, அந்த ஆயுதங்களால் சீனாவையும் தாக்க முடியும்” என்று அந்த சிந்தனைக்குழு குறிப்பிட்டுள்ளது.

“பாகிஸ்தானிடம் இந்தியாவைவிட குறைவான ட்ரோன்கள் இருந்தாலும், அந்நாடு வைத்திருக்கும் ட்ரோன்கள் வெவ்வேறு திறன்களைக் கொண்டவை. மேலும் அவை 10 முதல் 11 விதமான தயாரிப்புகளைச் சேர்ந்தவை”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: கொடிமலர்
பாடியவர்: பி. சுசீலா
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன்



மலரே நீ சொல்ல ஒரு மொழியும் இல்லை
மலரே நீ சொல்ல ஒரு மொழியும் இல்லை – உன்
மணத்தை வெறுத்தவர் யாரும் இல்லை
நிலவே நீ சொல்ல ஒரு மொழியும் இல்லை – உன்
நிழலை வெறுத்தவர் யாரும் இல்லை
மலரே மலரே நீ சொல்ல ஒரு மொழியும் இல்லை

பார்வையும் இல்லை பாசமும் இல்லை
ஆசைகள் உனக்கில்லை நிலவே
வேதனை உனக்கில்லை நிலவே – நான்
பார்வையினாலும் பாசத்தினாலும்
பார்வையினாலும் பாசத்தினாலும்
ஏங்குகிறேனே வாழ்க்கையில்லாமல்

மலரே மலரே நீ சொல்ல ஒரு மொழியும் இல்லை
மாலையும் இல்லை மணவறை இல்லை
ஊர்வலம் எனக்கில்லை மலரே
யாருக்கும் மனமில்லை மலரே – நான்
கோவிலைத் தேடும் கொடிமலராக
கோவிலைத் தேடும்
கொடிமலராக
வாடுகிறேனே வாழ்க்கையைத் தேடி

மலரே மலரே நீ சொல்ல ஒரு மொழியும் இல்லை – உன்
மணத்தை வெறுத்தவர் யாரும் இல்லை
நிலவே நீ சொல்ல ஒரு மொழியும் இல்லை – உன்
நிழலை வெறுத்தவர் யாரும் இல்லை
மலரே மலரே நீ சொல்ல ஒரு மொழியும் இல்லை

## அன்பு வாசகர்களே!

காலத்தால் அழியாத கானம் பகுதியில்
உங்களுக்குப் பிடித்த பழைய பாடல்களை
பெயர், முகவரியுடன் வாட்சப் செய்தால்
உங்கள் விருப்பப்பாடல் உங்கள் பெயருடன்
வெளிவரும்.
076 097 3126

# உயிர்களை அழிக்கும் போர் வேண்டாம்

**"பாலஸ்தீனில் நடப்பது போன்ற இனப் படு கொலைகளும், இலங்கையில் நடந்தது போன்ற கொத்துக்கொத்தான கொலைகளும் போர் என்ற பெயரிலேயே, நடைபெறுகின் றன."**

**போ**ர் நிச்சயமாகக் கொடூரமானதுதான். மனிதாபிமானத்தின் எச்சம் ஒட்டியிருக்கும் எந்த மனதாலும் போரை நியாயப்படுத்தவே முடியாது. போர்களால் பாதிக்கப்படுவது சாதாரண மக்கள்தான். இந்தியா- பாகிஸ்தான் பிரச்சினையில் மட்டும் அல்ல. உலகின் எந்த மூலையில் எங்கு போர் நடந்தாலும் ஒவ்வொரு போருக்குப் பின்னாலும் பாதிக்கப்படுவது சாதாரண மக்கள்தான்.

**உக்ரைன் - ரஷ்யா**

உக்ரைன்-ரஷ்யா இடையேயான போர் 3 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வரப் பல்வேறு உலக நாடுகளும் முயன்றாலும் பலன் கிடைக்கவில்லை. இந்தப் போரால் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். இன்றும் உருக்குலைந்த உக்ரைன் நகரங்களில் தொடர்ந்து மரண ஓலம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது. போரால் சொந்த ஊரை விட்டு அகதிகளாக அண்டை நாடுகளில் குடிபெயர்ந்த மக்கள் மீண்டும் சொந்த நாட்டிற்குத் திரும்பும் நாளை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்.

**இஸ்ரேல் - ஹமாஸ்**

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபரில் போர் தொடங்கியது. 18 மாதங்களாக நடைபெற்று வரும் இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில் உயிரிழந்த பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 52, 243 ஆக உயர்ந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்த மனைவி குண்டுவீச்சில் புதைந்துவிட, இடிபாடுகளின் மீது நின்று கதறிக்கொண்டிருந்த கணவன், குழந்தையின் பிறந்தநாள் கேக் வாங்கும் அந்த நொடியில் இரத்தம் கசியும் குழந்தையின் உடலை ஏந்தியபடி கண்ணீர் சிந்திய தகப்பன், இறந்து வெறும் புள்ளிவிபர எண்களாகப் பதிவாகியிருக்கும் ஒவ்வொருவரின் பின்னாலும் ஒரு துயரக்கதை இருக்கிறது.

இதேபோல சிரியா, சூடான் போன்ற உள்நாட்டு போர்களும் இலட்சக்கணக்கான சாதாரண மக்களின் வாழ்க்கையை நரகமாக்கி இருக்கிறது. குறிப்பாக சூடானில் 1 கோடியே 70 இலட்சம் குழந்தைகள் கடந்த ஓராண்டிற்கும் மேலாகப் பள்ளிக்குச் செல்ல இயலாத சூழல் நிலவுகிறது. 37 இலட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

"போர் மட்டும் இல்லை. இந்த உலகத்தில் நடக்கக்கூடிய எல்லா வன்முறைகளுக்குப் பின்னாலும் அதிகாரம் இருக்கிறது. சில சமயங்களில் இந்த அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தும்போது மிக மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தும். அதிகாரம் தவறாகப் பயன்படுத்தும்போது அது மானுடத்திற்கு எதிரான ஒன்றாகத்தான் இருக்கிறது. போர் மானுடத்திற்கு எவ்வளவு பெரிய வலியையும், பேரழிவையும் கொடுத்திருக்கிறது என்பதை முதலாம், இரண்டாம் போர்களில் பார்த்திருக்கிறோம்.

இன்னொரு உலகப்போர் வந்தால் நிச்சயம் அதைத் தாங்கக்கூடிய ஆற்றல் இந்த உலகத்திற்கு இல்லை. எப்போதுமே ஒரு போரில் சாதாரண மக்கள்தான். தொடர்ச்சியாகவும் அதிகமாகவும் பாதிக்கப்படுபவர்களாக இருக்கிறார்கள். குறிப்பாக சில போர்களில் பெண்களை ஒடுக்குவதற்காக பாலியல் வன்புணர்வை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி அதை வைத்து அவர்களை ஒடுக்கக்கூடிய விடயங்களும் நடக்கிறது.

அரசியலில் பல தளங்களிலும் சாதாரண மக்களின் பங்கேற்புக்கு வழிகள் உள்ளன. ஆனால் போர்களில் உண்டா? போர் என்றாலே ஜனநாயக முறைகளை முழுமையாக முடக்கிவிட்டு, ஆயுத வலிமையை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை மேற்கொள்வதாகும்.

பாலஸ்தீனில் நடப்பது போன்ற இனப்படுகொலைகளும், இலங்கையில் நடந்தது போன்ற கொத்துக்கொத்தான கொலைகளும் போர் என்ற பெயரிலேயே, நடைபெறுகின்றன. இவ்வாறு சர்வதேச சட்டங்கள் துச்சமாக்கப்பட்டும் போர்க்களங்களில் சாதாரண மக்கள் நேரடியாக உயிரிழப்பதைக் காண்கிறோம்.

இந்தியா, பாகிஸ்தானிடையே போர் மூளுமாக இருந்தால் அது நிச்சயம் பேரழிவுகளை ஏற்படுத்தும். உலகப் போர் மூளக் காரணமாகிவிடும். இந்த உலகிற்குப் போரை விரும்பாத, அன்பை நேசிக்கின்ற மனிதர்களே தேவையே தவிர போரை விரும்பும் தலைவர்கள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு ஆயுள்



# எவ்வளவு தெரியுமா?

அவர் ஒரு யாத்ரீகர். முன்காலைப் பொழுதொன்றில் ஒரு கிராம எல்லையில் வந்து நின்றார். அங்கே ஒரு கல்லறைத் தோட்டம். அதற்குள் நுழைந்தவர், கல்லறை வாசகங்களைப் படிக்க ஆரம்பித்தார். ஒரு விடயம் அவருக்கு விநோதமாகப்பட்டது.

எந்த ஊரிலும் இல்லாத வழக்கமாக, கல்லறைகளில் இறந்தவர்களின் வயது குறிக்கப்பட்டிருந்தது. ஒன்றில், இறந்தவரின் பெயர் எழுதப்பட்டு **"வயது ஐந்து"** என்று பொறித்திருந்தது. அடுத்ததில் **"வயது எட்டு"** என்று இருந்தது. அதற்கடுத்ததில் **"பன்னிரண்டு"**, மற்றொன்றில் **"பதினான்கு"**. இறந்துபோனவர்களின் அதிகபட்ச வயது **"இருபது"**. அசந்து போனார் யாத்ரீகர். "இதென்ன, இந்த ஊர் மக்களுக்கு இவ்வளவு அற்ப ஆயுசு" யோசித்தபடியே கிராமத்துக்குள் நுழைந்தார்.

அங்கிருந்தவர்கள் எளிய மனிதர்கள். யாத்ரீகர் என்பதால் அன்போடு அவரை வரவேற்றார்கள். வசதியான ஒரு வீட்டில் தங்கவைத்தார்கள். உபசரித்தார்கள். மதிய உணவுக்குப் பிறகு கிராமத் தலைவர் அவரைப் பார்க்க வந்தார். "ஐயா... நீங்கள் எங்களுடனேயே இருக்க வேண்டும் என்று இங்கிருக்கும் எல்லோரும் ஆசைப்படுகிறோம். அதற்கு உடன்பட மாட்டீர்கள் என்று தெரியும். குறைந்தது இரண்டு மாதங்களாவது நீங்கள் இங்கே தங்கிவிட்டுச் செல்ல வேண்டும்" என்றார்.

"இரண்டு மாதங்களா? இல்லை. நான் நாளை காலையிலேயே இங்கிருந்து புறப்படவிருக்கிறேன்."

"ஏன்? ஏதாவது அவசர வேலையா?"

"இல்லை. இங்கே இருப்பதே எனக்கு திகிலை ஏற்படுத்துகிறது. உங்கள் கிராமத்துக் கல்லறைத் தோட்டத்துக்குப் போயிருந்தேன். இறந்தவர்கள் அத்தனை பேரும் அற்ப ஆயுளில் உயிரை விட்டிருக்கிறார்களே?" ஐயா, நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டீர்கள். இறந்தவர்கள் அத்தனை பேருமே எழுபது, எண்பது வயது வரை வாழ்ந்தவர்கள்.

அவரைக் கேள்விக்குறியோடு பார்த்தார் யாத்ரீகர். "எங்கள் கிராமவாசிகளுக்கு பக்தி அதிகம். ஒரு நாளில் அன்றாட வேலைகள் போக, எத்தனை மணி நேரம் இறை வழிபாட்டில், சிந்தனையில் ஈடுபட்டோம், பக்திப் பாடல்களைப் பாடினோம் என்பதை டைரியில் குறித்து வைப்பது எங்கள் வழக்கம். ஒருவர் இறந்த பிறகு, அவர் எழுதி வைத்திருக்கும் டைரியை எடுத்து, இறை வழிபாட்டில் அவர் இருந்த நேரத்தை மட்டும் வருடங்களாகக் கணக்கிட்டு, அதை அவருடைய வயதாக கல்லறையில் பொறித்து வைப்போம். இறை சிந்தனையில் நாம் மூழ்கியிருக்கும் நாட்கள்தானே அர்த்தமுள்ளவை. அந்த நாட்கள்தானே நம் உண்மையான ஆயுட்காலம்?" யாத்ரீகர் உடல் சிலிர்க்க தலைவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

# ஆச்சி அறிவுரை



## பள்ளிக்கூடச் சாப்பாட்டைச் சாப்பிடுறது கௌரவம் இல்லையா?

மாவை.நா.கஜேந்திரன்

**பேராண்டி...**

உணவே மருந்து என்றொரு பழமொழியுண்டு. அது நூறு விகிதம் உண்மையானது. உணவு எண்டுறது ஆரோக்கியத்துக்கானதா இருக்க வேண்டுமே தவிர, ஆடம்பரத்துக்காக இருந்தால் நோய் முத்தி நாற்பது கடக்க முன்னமே வாழ்வு முடிஞ்சு போயிடும்.

படிக்கிற பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவு வலு முக்கியம். இலங்கையில் ஆரம்பப் பாடசாலைகளில பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கிற திட்டம் இருக்குது.

இது அரசாங்கத்தால கொண்டுவரப்பட்ட மிக முக்கியமான திட்டம். அரசாங்கத் திட்டங்களிலேயே இதுதான் திறமான திட்டம் எண்டு சொல்லுவன்.

அந்தளவுக்கு மிகச் சிறந்த திட்டம் இது. பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவு கிடைக்கவேணும் எண்டறதோட, குடும்ப வறுமையால பிள்ளைகள் சாப்பிடாமல் இருக்குமெண்டால் அது பிள்ளையின்ர படிப்பைப் பாதிக்கும் எண்டுற சிந்தனையை போற்றித்தான் ஆகவேணும்.

ஆனால் பள்ளிக்கூடச் சாப்பாட்டைச் சாப்பிடுறது தங்களுக்கு கௌரவக் குறைவு எண்டு தங்கட பிள்ளைகளுக்கு சில தாய், தகப்பன் வீட்டிலையிருந்து சாப்பாடு கொடுத்து விடுகினம்.

அப்படி அந்த பள்ளிகூடச் சாப்பாட்டை விட வேற எந்த திறஞ்சாப்பாட்டை பிள்ளைகளுக்கு குடுத்து விடுகினமெண்டு பார்த்தால்: புட்டும் பொரியலும், இடியப்பமும் சம்பலும், தோசையும் சாம்பாரும், இட்லியும் சட்னியும் தான் பிள்ளைகளுக்கு கொடுத்துவிடுகிற சாப்பாடு.

கோதாரி, இந்தப் புட்டிலையும் இடியப்பத்திலையும் என்ன சத்து இருக்கு தெண்டுதான் தெரியேல்லை.

இதை விட ஒரு படி மேலபோற பெற்றோரும் இருக்கினம். ஓம் பேராண்டி! இப்ப எல்லாப் பள்ளிகூடங்களுக்குப் பக்கத்திலையும் ஒரு சாப்பாட்டுக் கடை கட்டாயம் இருக்கும்.

அறக்கப்பறக்க பிள்ளையை வெளிக்கிடுத்தி மோட்டார் சைக்கிளில ஏத்திக் கொண்டு வந்து கடை வாசலிலை நிக்க, கடைக்காரர் ஓடி வந்து சாப்பாட்டு பெட்டியை வாங்கிக் கொண்டு போய் புட்டு, இடியப்பம், இட்லி இதுகளில ஏதோ ஒண்டில நாலை வைச்சு, பால் பிளிஞ்ச தேங்காய்ப் பாலில இடிச்ச சம்பலையும் கொஞ்சம் வைச்சு மூடிக் கொடுக்க, அதைப் பிள்ளையின்ர புத்தகப்பைக்குள்ள வைச்சு விடுகிற கொடுமைகளும் நடக்கிறது.

பள்ளிக்கூடத்தில அதிபர், அசிரியர்களின்ர நேரடி மேற்பார்வையில எவ்வளவு சுத்தமாக சமையல் நடக்குது. இங்க சமைக்கிற சாப்பாட்டில வளரும் பிள்ளைக்குத் தேவையான சத்துக்கள் என்னென்ன இருக்கிறது எண்டு பாராமல், பள்ளிக்கூடச் சாப்பாடு சாப்பிடுறது கௌரவமில்லை எண்டு தவிர்த்துவிட்டு, புட்டையும் இடியப்பத்தையும் பிள்ளைக்குக் கொடுத்துவிடுறது முறையோ?

பள்ளிக்கூடத்தில சமைச்சு முடிய அந்தச் சாப்பாட்டை எங்கட அதிபர் சாப்பிட்டுப் பார்த்திட்டுத்தான் எல்லாருக்கும் கொடுக்க அனுமதிப்பார் எண்டு நீ சொன்னதா கொம்மா சொன்னவா.

பேராண்டி! கௌரவம் எண்டுறது அடுத்தவர்களை ஏமாற்றாமல் எங்கட சொந்த முயற்சியில நாங்கள் முன்னுக்கு வாறதுதான். இதைப் புரியாமல் நடந்து கொள்ளுற சில பெற்றோர் இதுகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடி உதிர்விற்கு தீர்வு என்ன?



"ஏன் முடி உதிர்கிறது" என்ற கேள்விக்கு "கவலை தான்" என்றாராம் ஒருவர். "அப்படி என்ன கவலை" என்று கேட்டதற்கு, "முடி உதிர்வது தான்" என்றாராம் பதிலுக்கு. முடி உதிர்வு பற்றிய பிரபலமான ஜோக் இது. நகைச்சுவையாகத் தெரிந்தாலும் இது உண்மையும்கூட.

முடி உதிர்வுக்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் முதலிடம் மன அழுத்தம் எனப்படும் ஸ்ட்ரெஸ்ஸுக்கு. மன அழுத்தம் அதிகமாவதன் விளைவால் ஏற்படுகிற முடி உதிர்வுப் பிரச்சினையை "அலோபேஷியா அரியேட்டா", "டெலோஜன் எஃப்ளுவியம்" மற்றும் "ட்ரைக்கோ டில்லோமேனியா" என மூன்றாக வகைப்படுத்தலாம்.

முதல் வகையான "அலோபேஷியா அரியேட்டா"வில், இரத்த வெள்ளை அணுக்கள் ஃபாலிக்கிள் எனப்படும் கூந்தலின் வேர்ப்பகுதியைத் தாக்கி, கூந்தல் வளர்ச்சியைத் தடைசெய்வதுடன், முடி உதிர்வுக்கும் காரணமாகும். "டெலோஜன் எஃப்ளுவியம்" என்கிற நிலையில் அதீத மன அழுத்தம் மற்றும் மன உளைச்சல் காரணமாக, வளரும் நிலையில் உள்ள முடிக் கற்றைகள், உதிர்வதற்கு முன்பான ஓய்வுநிலைக்குத் தள்ளப்படும்.

அதிக டென்ஷன், கவலையில் இருக்கும் நாட்களைத் தொடர்ந்து முடி உதிர்வும் அதிகமாக இருப்பதை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? காரணம் இதுதான். சாதாரணமாக தலை சீவும் போதும் தலைக்குக் குளிக்கும் போதும் கொத்துக் கொத்தாக முடி உதிர்வதெல்லாம் இந்தப் பிரச்சினையால்தான்!

அடுத்தது "ட்ரைக்கோடில்லோமேனியா". அரிய வகை மனநல பாதிப்பான இதில், உடலில் எங்கு முடிகள் இருந்தாலும், அதைப் பிடுங்க நினைப்பார்கள். நெகட்டிவ் எண்ணங்கள், மன உளைச்சல், படபடப்பு, தோல்வி, தனிமை, அதீத களைப்பு, விரக்தி மனநிலை போன்றவை ஏற்படுகிறபோது, முடிகளைப் பிடுங்கி எறிய ஓர் உந்துதல் உண்டாகும்.

கூந்தல் வளர்ச்சியில் உணவுக்கு மிக முக்கிய பங்குண்டு. புரதச்சத்தும் இரும்புச்சத்தும் கூந்தல் வளர்ச்சிக்கு மிக அவசியம். அந்தவகையில் கறிவேப்பிலை, கீரை, தயிரில் ஊற வைத்த வெந்தயம், முட்டை, பன்னீர் போன்றவையும், நட்ஸ், பேரீச்சம்பழம், மீன் போன்றவற்றையும் தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.



தினமும் கூந்தலுக்கு எண்ணெய் வைக்காவிட்டாலும், வாரத்தில் 2-3 நாட்களுக்காவது எண்ணெய் உபயோகிப்பது, கூந்தல் வறட்சியைப் போக்கி, முடி உதிர்வைக் கட்டுப்படுத்தும்.

# பெற்றோர்களே கவனம்!



டெக்னோலஜி வளர்ந்துகொண்டே போகும் இந்தக் காலகட்டத்தில் குழந்தைகளின் கையிலும் முழு நேரமும் மொபைல் போன் இருக்கிறது. பெற்றோர்களுடனும், சக குழந்தைகளுடனும் விளையாடுவதைத் தவிர்த்துவிட்டு முழு நேரமும் டிவி, மொபைல் போன் என்றே அவர்களின் நாட்கள் நகர்கிறது. சாப்பிடும்போதும், தூங்கும் நேரங்களிலும்கூட அவர்கள் இந்த மொபைல் போனை மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

இதனால் கண் பிரச்சினை, தூக்கப் பிரச்சினை எனப் பல பாதிப்புகள் அவர்களுக்கு ஏற்படுகிறது. இதுகுறித்து ஈரோட்டைச் சேர்ந்த குழந்தைகள் நல மருத்துவர் அருண் குமார் நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார்.

குழந்தைகள் மொபைலை அதிகமாகப் பயன்படுத்துவதால் கண் பிரச்சினைகள் அதிகம் ஏற்படுகிறது. 20 நிமிடத்திற்கு மேல் தொடர்ந்து 20cm தொலைவில் பக்கத்தில் வைத்துப் பார்க்கும்போது கண் பார்வைத்திறன் குறையும் வாய்ப்பு இருக்கும்.

இதனால் கண்ணாடி போடும் தேவை வரும். கண் சோர்வும் ஏற்படும். குழந்தைகள் தொடர்ந்து மொபைல் போனை அதிக நேரம் பார்க்கும்போது கண்ணை அதிகம் சிமிட்டிக்கொண்டு இருப்பதையும் நாம் பார்க்கலாம். இதற்குக் காரணம், தொடர்ந்து ஒரே பொருளை அதிக நேரம் பார்க்கும்போது கண்ணில் ஏற்படும் வறட்சியே ஆகும்.

மொபைல் போனை அதிகம் பயன்படுத்துவதால் குழந்தைகளுக்குப் பேச்சுக் குறைபாடு வரவும் வாய்ப்பு உள்ளது. குழந்தைகள் பேச ஆரம்பிப்பதும் தாமதமாக வாய்ப்புள்ளது.

இப்படி அவர்கள் மொபைல் அதிகம் பயன்படுத்துவதால் கண் பிரச்சினைகள், கவனச்சிதறல் மட்டுமல்லாமல் மனம் சார்ந்த பிரச்சினைகள், மனச்சோர்வு, குழப்பம் போன்ற பிரச்சினைகளும் ஏற்படும். மொபைல் போன் அதிகம் பார்ப்பதால் குழந்தைகளுக்கு ஏதேனும் பிரச்சினைகள் வந்தால், குழந்தைகள் நல மருத்துவரிடம் சென்று அதற்கான தீர்வைப் பெறுங்கள், ஒத்திப்போடாதீர்கள்.

# சமைப்போம் சுவைப்போம்

## முசுமுசுக்கைக் கீரை தோசை

### தேவையானவை :

1. முசுமுசுக்கைக் கீரை – ஒரு கைப்பிடி அளவு
2. பூண்டு – 3 பல்
3. இஞ்சி – ஒரு சிறிய துண்டு (தோல் சீவவும்)
4. மிளகு – அரை தேக்கரண்டி
5. புழுங்கல் அரிசி – 100 கிராம்
6. உளுந்து – 50 கிராம்
7. வெங்காயம் – ஒன்று (பொடியாக நறுக்கவும்)
8. உப்பு – தேவைக்கேற்ப

### செய்முறை

அரிசி, உளுந்தை 2 மணி நேரம் ஊறவைக்கவும். அத்துடன் பூண்டு, இஞ்சி, முசுமுசுக்கைக் கீரை, உப்பு, மிளகு சேர்த்து, அதனுடன் தேவைக்கேற்ப தண்ணீர் சேர்த்து, தோசை மாவு பதத்துக்கு அரைத்துக் கொள்ளவும். மாவுடன் நறுக்கிய வெங்காயம் சேர்க்கவும். புளிக்க வைக்க வேண்டிய அவசியமில்லை. உடனே தோசை வார்க்கலாம்.



இந்தத் தோசை சளித் தொந்தரவு, இருமல் ஆகியவற்றுக்கு ஏற்ற மருந்தாகச் செயற்படுகிறது.

முசுமுசுக்கை நுரையீரல் மற்றும் சுவாசக் கோளாறுகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"Everyone is a spectator here!"*

# யார்றா அந்தப் பையன்...?



இந்த வர்ணனைதான் கமெண்ட்ரியில் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது.. ஆம். வைபவ் சூர்யவன்ஷி ஒற்றைக் காலை க்ரீஸுக்குள் ஊன்றி அடித்த பெரிய சிக்சர்களும் அதன்வழி அவர் எட்டிய சதமும் அப்படியான தாக இருந்தது. 14 வயதில் அவர் ஐ.பி.எல் இல் நிகழ்த்தியிருப்பது மாயாஜாலம். வெறும் 35 பந்து களில் அவர் சதத்தை எட்டியிருக்கிறார்.

"என்னுடைய கண்களை அவரது ஆட்டத் திலிருந்து அகற்றவே முடியவில்லை. நான் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்." என மெய் மறந்து வைபவ்வை பாராட்டியிருக்கிறார் ஹர்ஷா போக்லே.

லக்னோ அணிக்கெதிரான அறிமுக ஆட்டத் தில் ஷர்துல் தாகூருக்கு அவரது ஐ.பி.எல் கரியரின் முதல் பந்தை சிக்சராக்கிய போதே கிரிக் கெட் உலகம் மொத்தமும் அவரை வியந்து பார்த்தது. அடுத்த ஒன்றிரண்டு வாரத்திலேயே இப்படி ஒரு ஆட்டத்தை ஆடியிருக்கிறார். மொத்தம் 11 சிக்சர்கள். 7 பவுண்டரிக்கள். வேகப்பந்து வீச்சாளர்களை பின்னங்காலை க்ரீஸுக்குள் ஊன்றியும் ஸ்பின் பௌலர்களை முட்டி போட்டும் வெளுத்தெடுத்தார்.

இத்தனைக்கும் குஜராத் டைட்டன்ஸின் பௌ லிங் லைன் அப் அனுபவமும் இளமையும் ஒரு சேர அமையப் பெற்றது. இஷாந்த் சர்மாவின் அனுபவத்தில் முக்கால்வாசிதான் வைபவ்வின் வயது. அவரின் ஒரு ஓவரில் மட்டும் 28 ரன்களை எடுத்திருந்தார். அறிமுக வீரர் கரீம் ஜன்னத்தின் ஒரே ஓவரில் 30 ரன்கள்.

வோஷிங்டனில் ஒரே ஓவரில் 16 ரன்கள் என எதிர்கொண்ட ஓவர்களையெல்லாம் பெரிய பெரிய ஓவர்களாக மாற்றினார். அதன் வழி 35 பந்துகளி லேயே சதத்தை எட்டினார். ஐ.பி.எல் வரலாற்றில் அடிக்கப்பட்ட இரண்டாவது அதிவேக சதம் இது. 101 ரன்களில் பிரஷித் கிருஷ்ணாவின் பந்தில் போல்டை பறிகொடுத்து வெளியேறினார். வைபவ்வின் ஆட்டத்தினால் ராஜஸ்தான் அணி 16ஆவது ஓவரிலேயே 210 ரன்களை சேஸ் செய்து முடித்தது.

ஆட்டநாயகன் விருதை வாங்கிவிட்டு வைபவ் பேசுகையில், "ரொம்பவே மகிழ்ச்சியாக உணர்கி றேன். ஐ.பி.எல் இல் என்னுடைய முதல் சதம் இதுதான். அதுவும் என்னுடைய மூன்றாவது இன்னிங்ஸிலேயே வந்திருக்கிறது. நான் கடுமையாக எடுத்துக்கொண்ட பயிற்சிகளின் வெளிப்பாடுதான் இந்த இன்னிங்ஸ். ஜெய்ஸ்வாலு டன் பட்டிங் ஆடியதும் நல்ல அனுபவமாக இருந்தது. சதமடிக்க வேண்டும் என்பது கனவு. அது இன்றைக்கு நிறைவேறிவிட்டது. எனக்கு எந்தப் பயமும் இல்லை. என்னுடைய ஆட்டத் தின் மீது மட்டுமே முழுக்கவனத்தையும் கொடுத்து ஆடுகிறேன். என்றார்.

வைபவை யூனிவர்சல் பாஸ் கிறிஸ் கெய்லின் ஜீனியர் வெர்ஷன் என குறிப்பிடும் வகையில் **Boss Baby** என கமெண்ட்ரியில் பெயர் வைத்திருக்கி றார்கள். வைபவ்வின் ஆட்டத்தைப் பார்க்கையில் கெய்லின் சாயல் தெரியத்தான் செய்கிறது!

**வாழ்த்துகள் வைபவ்!**



# அனல் பறந்த ஆட்டம்

## அசத்தல் வைபவ் சூர்யவன்ஷி!

# தெளிவே என் சிந்தனையுள்... 8

சித்துக்கள் பற்றி பல்வேறு கதைகள் இருந்து வருகிறது. பகவான் சாயிபாபா அவர்கள் லிங்கங்களை வாயிலிருந்து எடுப்ப தாகக் கூறுவார்கள். பகவான் சீரடி சாயி பாபா அவர்கள் பொங்கிக் கொதித்துக் கொண்டிருக்கும் உணவை வெறும் கை களால் எடுப்பார் என்று கூறுவார்கள்.

இவற்றை சிலர் மாயவித்தை, ஏமாற்று என்று கூறிக் கொள்வார்கள். ஆயினும் நம்புபவர்களுக்கு அவை சித்து.

இவ்வாறு என் தந்தையிடம் இறைவன் சித்து விளையாடிய கதையை உங்களுக்குக் கூறுகிறேன்.

அது 1989, எனக்கு வயது எட்டு. கீரிமலை கிருஷ்ணன் கோவிலில் (உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து தற்போது விடுக்கப்பட் டுள்ளது) அபிஷேகப் பொருட்களைக் கொடுத்து விட்டு வரும்படி எனது அம்மா அப்பாவிடம் கோரினார்.

அதற்கு அப்பா தான் எங்கோ அவசரமாக புறப்படுவதாகக் கூறினார்.

கடவுளுக்கு அபிஷேகப் பொருட்களைக் கொடுப்பதைவிட வேறு அவசரமான வேலை என்ன என அம்மா அப்பாவை வினாவினார்.

இல்லை அதைவிட முக்கியமான வேலை என அப்பா மறுத்தார். சரி நான் நடந்து போகி றேன் என்றார் அம்மா. சிறிது நேரம் யோசித்த அப்பா அபிஷேகப் பொருட்களைக் கொடுங்கள் கோவிலில் கொடுத்து விடுகி றேன் என்று கூறியபடி என்னையும் அழைத் தார்.

அப்பாவின் சைக்கிள் விரைகிறது. கோவில் வாசலில் சைக்கிளை நிறுத்திப் பூட்டிவிட்டு அவசர அவசரமாக அப்பா கோவி லுக்குள்ளே சென்று, கோவில் பூசகரிடம் அபிஷேகப் பொருட்களை ஒப்படைத்து விட்டு வெளியே வந்தார்.

சைக்கிள் திறப்பைக் காணவில்லை. நானும் அப்பாவும் சைக்கிள் திறப்பைத் தேடத் தொடங்கினோம். ஒரு மணி நேரமாகி விட்டது. திறப்புக் கிடைக்கவில்லை.

இனித் தேடிப் பயனில்லை. பூட்டை உடைப்போம் என்று சினந்தபடி கையை உதறினார் அப்பா. என்ன அதிசயம் சேட் மடிப்புக்குள் இருந்து திறப்பு கீழே விழுந்தது. அப்பா அதிர்ந்து போனார்.

உடனே கோவிலுக்குள் சென்று சுற்றிக் கும்பிட்டுவிட்டு பொறுமையாக வந்தார்.

**அன்பானவர்களே!**

இறைவனை மிஞ்சிய சக்தி என்று எதுவுமே இல்லை. இது மனிதர்களுக்குப் புரிவதில்லை. அதை அவ்வப் போது அவன் மனிதர்களுக்கு உணர்த்திவிடு வான்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

53

## செங்கை ஆழியான்

மன்னார் அடம்பனில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் 15, ஒக்டோபர் 1986 இல் பயங்கரமான நேரடி மோதல் ஒன்று நிகழ்ந்தது. அதில் விடுதலைப்புலிகள் பக்கத்தில் லெப்டினன்ட் விக்ரரும், இரண்டாவது லெப்டினன்ட் றோமும் பலியாகினர்.

இராணுவத்தினரில் 24 பேர் பலியாகினர். அவர்களில் ஒன்பது பேரின் சடலங்கள் யாழ்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அந்தச் சண்டையில் இரு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் உயிருடன் சிறைபிடிக்கப்பட்டனர். அந்த ஒன்பது பேரின் சடலங்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணக் கோட்டை இராணுவக் கப்டன் கொத்தலாவல தளபதி கிட்டுவிடம் கோரிக்கை விடுத்தார். விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்தனர். அன்று மாலை விலையுயர்ந்த சவப்பெட்டிகளில் அச் சடலங்கள் தனித்தனியாக இடப்பட்டு வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு யாழ். கோட்டை முன்றலிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. நிராயுதபானிகளாக கோட்டையிலிருந்து வெளிவந்த கப்டன் கொத்தலாவல அச் சடலப் பேழைகளை நன்றியுடன் பெற்றுச்சென்றார்.

அடம்பனில் கைதான இரு ஸ்ரீலங்கா இராணுவ வீரர்களையும் விடுவிக்கும் முயற்சியில் விஜேகுமாரணதுங்க ஈடுபட்டார். அவர் தளபதி கிட்டுவிடம் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து அவரைச் சந்திக்க அனுமதி பெற்றார். 27, ஒக்டோபர், 1986 அன்று அவரும் ஒஸி, அபே குணசேகரவும் விமானம் மூலம் பலாலி வந்தனர், பின்னர் ஹெலிகொப்டரின் மூலம் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கிருந்து கப்டன் கொத்தலாவல, கப்டன் பெரேரா ஆகியோரால் கோட்டை வாசலுக்கு அழைத்து வரப்பட்டு, தளபதி கிட்டுவிடம் கையளிக்கப்பட்டனர். விஜே குழுவினர் விடுதலைப் புலிகளால் அவர்களது முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, கைதிகளுடன் அளவளாவ விடப்பட்டனர். "அவர்களை விடுவிப்பதாயின் நாங்கள் கோரும் இரு விடுதலைப் புலிகளை இலங்கை அரசு விடுதலை செய்ய வேண்டும்" என்ற நிபந்தனையைத் தளபதி கிட்டு விதித்தார். அந்த நிபந்தனையை ஏற்று விஜே குழுவினர் கொழும்பு சென்றனர்.

கைதிகள் பரிமாற்றம் பற்றி அரசு சார்பில் கப்டன் கொத்தலாவலவும் சேணல் ஆனந்த சேகரவும் முன்னேற்பாட்டின் படி யாழ்ப்பாணக் கோட்டையைவிட்டு வெளியில் வந்தனர். அவர்களையும் அவர்களுடன் நிராயுதபானிகளாக வெளியில் வந்த 12 இராணுவத்தினரையும் யாழ்ப்பாணக் கோட்டை வாசலில் வரவேற்ற கிட்டு, ரஹீம், திலீபன் ஆகியோர் தம் வாகனங்களில் ஏற்றித் தம் முகாமிற்கு அழைத்துச்சென்றனர். கப்டன் கொத்தலாவல 19 பேரின் பெயர்களைத் தளபதி கிட்டுவிடம் கொடுத்தார்.

(தொடரும்...)

# மரக்கலமல்ல.. மனக்கலம்




அத்தகைய எண்ணங்களுடனும் எண்ணங்களால் ஏற்பட்ட கவலையுடனும் அடுத்த சில நாட்கள் அவள் மாளிகையில் அதிக நேரம் இருக்காமல் கோட்டைக்குள்ளும் கடற்கரையிலும் நடமாடி வந்தாள்.

கடற்கரையில் அவள் கவலையைத் தீர்க்க எழுந்த தெய்வப் பறவைபோல் எழுந்து கொண்டிருந்தது இளையபல்லவன் கடல்புறா. கண்டியத்தேவன் மேற்பார்வையில் பிரதிதினம் தொழில் வல்லுநர் மிக மும்முரத்துடன், கப்பலை மாற்றியமைத்து வந்ததையும் அந்த மரக்கலத்தின் அமைப்பே புதுவிதமாக இருந்ததையும் கவனித்த மஞ்சளழகி தான் மனக் கவலையை மாற்றிக் கொள்ளத் தினந்தோறும் நீண்ட நேரம் நீர்க்கரையின் முகப்பிலேயே கழித்து வந்தாள்.

வேலை நடந்துகொண்டிருந்த இடத்திற்குச் சற்றுத் தள்ளி நீர்க்கரையில் அமர்ந்த அக்ஷயமுனையின் அழகி அந்தக் கப்பலின் அழகைக் கண்டு வியந்தாள்.

கண்டியத்தேவன் கடற்புறாவுக்கு வெகு துரிதமாக உருக்கொடுத்துக் கொண்டிருந்தான். கரையில் நன்றாக இழுக்கப்பட்டு, பாதி நீரிலும் பாதி தரையிலுமாகச் சற்றே சாய்ந்திருந்த அந்தப் பெரும் மரக்கலத்தில் தளங்களின் பழைய பாய்மரங்கள் நீக்கப்பட்டு, பகிட்பாரிஸான் காட்டுப் பகுதியின் வைரம் பாய்ந்த மரங்கள் பாய் கட்டப் பொருத்தப்பட்டபடியால் சில நாள்களுக்குள்ளாகவே இணையற்ற கம்பீரத்தை அடைந்தன அந்த மரக்கலம்.

சீனத்து மரக்கலத்தின் நான்கு பாய்மரங்களுக்குப் பதில் ஆறு பாய்மரங்கள் அந்த மரக்கலத்தில் பொருத்தப்பட்டன. அவற்றில் மூன்று சிறியதாகவும் மூன்று பெரியதாகவும் இருந்ததையும் கண்ட மஞ்சளழகி அப்படியேன் பலபடி பாய்மரங்களை அமைக்கிறார்கள் என்பதை அறியாமல் குழம்பினாள். அதுமட்டுமல்ல, நடுவிலிருக்க வேண்டிய கப்பல் தலைவன் அறையைக் கப்பலின் முகப்பில் அமைத்துக் கொண்டிருப்பது அத்தனை உசிதமா என்ற சந்தேகமும் அவளுக்கு எழுந்தது. அந்தச் சந்தேகத்தைக் கண்டியத் தேவனையே கேட்டாள் அவள். "முகப்பில் தலைவர் அறை இருப் பது உசிதமா தேவரே!" என்ற அவள் கேள்விக்கு, "அக்ரமந்திரத்தை அமைப்பது இப்படித்தான்" என்று கண்டியத்தேவன் பதில் சொன்னான்.

"அப்படியானால் மரக்கலத் தலைவனும் முகப்பில் தானே இருக்கமுடியும்?" என்று வினவினாள் மஞ்சளழகி.

"ஆம்," என்றான் தேவன்.

# கடற்புறா

போர் ஏற்படும்போது முகப்பில் இருப்பவருக்கு ஆபத்து எற்படுமே என்று அவள் கவலையுடன் கேட்டாள். அக்ரமந்திரத்தில் முகப்பில் ஆபத்தில்லை என்றான் தேவன். ஏன் என்று வினவினாள் அவள். அறையின் அமைப்பு அப்படி. மரக்கலத்தின் அமைப்பும் அப்படி. எதிரிகள் அம்புகளையோ வேல்களையோ வீசும் போது முகப்பைத் தாழ்த்த இந்தப் போர்க்க கப்பலில் வசதி உண்டு. அதற்காகவே இதன் முன் புறத்தை சற்றுத் தாழ்த்தியும் பின் புறத்தை சற்றுத் தூக்கியம் அமைக்கின்றோம். அமைப்பே இப்படி. தவிர துடுப்புகள் துலாவும் போது பின்புறத் துடுப்புக்களை ஆழத்தில் துழாவி, சுக்கானை அழுத்திப் பிடித்தால் மரக்கலம் முகப்பைச் சற்றுத் தாழ்த்திக் கொண்டு மீனைப் பிடித்துச் செல்லும். மீன்கொத்தி போல் விர் என்று நீரைப் பிளந்து செல்லும். தூர இருந்து பார்ப்பவர்களுக்கு கப்பல் மூழ்கிப்போய் விடுவது போல தோன்றும். ஆனால் அந்தச் சமயத்தில் தான் இந்த மரக்கலம் அபாயமானது. இதன் மீது வீசப்படும் அம்புகளும் வேல்களும் முகப்பு தாழ்ந்திருப்பதால் அக்ரமந்திரத்தை தொடாமல் பின் பக்கம் சென்று விடும். இங்கிருந்து எய்யப்படும் அம்புகள் நேராக எதிரிக் கப்பலைத் தாக்கும் என்று விளக்கினான் தேவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா

# முகம் 10; அஜித்குமார்!



1. கலைப் பொருட்கள் மீது பெரும் தாகம் கொண்டவர். ரேஸ் ட்ராக்கிற்குப் பிறகு மியூசியங்களில் அதிகம் பார்க்கலாம்! பல்வேறு நாடுகளின் நாணயங்கள், அதிநவீன கமரா, மினியேச்சர் ஹெல்மெட்டுகள், தபால் தலைகள், விதவிதமான கைக்கடிகாரங்கள் அவரது சேமிப்பில் இருக்கின்றன. விதவிதமான பைக்குகளைச் சேகரிப்பதும் பிடிக்கும்.

2. தீவிர சாய்பாபா பக்தர். புதிதாக கார், பைக் எது வாங்கினாலும் சாய்பாபாவின் பெயரை மெலிதாய் உச்சரித்துவிட்டுத் தான் உபயோகிக்கத் தொடங்குவார். திருப்பதி வெங்கடாசலபதி தரிசனம் பிடித்த விடயம். பிரபலத்தைக் கொஞ்சமும் பயன்படுத்தாமல் கீழ் திருப்பதியிலிருந்து மேலே திருமலைக்கு நடந்தே செல்வார். கோயில் அதிகாரிகள் சலுகைகள் தந்தாலும் மறுத்து பொதுமக்களுடன் செல்வதை விரும்புவார். 15 வருடங்களுக்கு முன் திருவண்ணாமலைக்கு கிரிவலம் சென்ற நாட்களும் உண்டு.

3. நடிகைகளில் ஸ்ரீதேவியை ஒரு ரசிகராக ரொம்பவும் பிடிக்கும். ஸ்ரீதேவி கேட்டுக்கொண்டதால் "இங்கிலீஷ் விங்கிலீஷ்" படத்தில் நடித்தார். அதற்காக எவ்வளவோ கேட்டுக் கொண்டும் அஜித் சம்பளமே பெறவில்லை.

4. அவரது அரசியல் நிலைப்பாடு என்னவென யாராலும் யூகிக்கக்கூட முடியாது. தன் நெருங்கிய வட்டத்தில்கூட அரசியல் பேசுவது கிடையாது. ஆனால் உலக அரசியல் முதற்கொண்டு உள்ளூர் அரசியல் வரை அவருக்கு அத்துப்படி!

5. துப்பாக்கி சுடுவதில் விற்பன்னர். முறைப்படி லைசென்ஸைத் தவறாமல் புதுப்பித்துக் கொள்வார். டிரோன்களை உருவாக்கி, ரிமோட் மூலம் அவற்றைப் பறக்க விட்டு சாகசங்கள் செய்வதும் பிடிக்கும். அவருக்கு பியானோ, அக்கார்டியன் நன்கு வாசிக்கவும் தெரியும்.

6. பயணங்களின் மீது பெருங்காதல் கொண்டவர். போகும் இடத்தை அடிக்கடி மாற்றிக்கொண்டு புதுமை செய்வார். ஜி.பி.எஸ் மூலம் மட்டுமே அவர் இருப்பிடத்தை அறிய முடியும். அண்மையில்கூட பைக்கிலேயே 25 நாள் பயணமாக டேராடூன், 9 நாள் பயணமாக கைலாஷ் போய் வந்திருக்கிறார். "புது மனிதர்களைச் சந்திப்பது, புதிய பாதைகளில் செல்வதன் மூலம் எனக்குள் நான் புதுப்பயணம் செய்கிறேன்" என்பார்.

7. முன்பு ரஜினி அவரிடம் கொடுத்த, "ஹிமாலயன் மாஸ்டர்ஸ்" புத்தகம் அவர் வாழ்க்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது என விகடன் பேட்டியில் சொல்லியிருக்கிறார். அதனால் இமயமலைப் பக்கமே அவரது பெரும்பாலான பைக் பயணங்கள் நிகழ்கின்றன.

8. எந்தப் படமாக இருந்தாலும் ஒரே மூச்சில் டப்பிங் பேசி முடிப்பது அவர் வழக்கம். அதிகபட்சம் இரண்டு நாட்கள்தான் எடுத்துக் கொள்வார். மிகத் துல்லியமான ஞாபக சக்தி. 20 ஆண்டுகளுக்கு முன் ஒருவரைச் சந்தித்து உரையாடியிருந்தால்கூட, அவரின் பெயர் சொல்லி விசாரிப்பார். அவர்கள் ஆச்சரியத்தில் வாயடைத்துப்போவார்கள்.

9. நேரம் கிடைக்கும்போதெல்லாம் விளையாட வீட்டிலேயே ஷட்டில் கோர்ட் அமைத்திருக்கிறார். மனைவி ஷாலினியும் மகள் அனோஷ்காவும் சக பிளேயர்கள். வீட்டில் பாத்திரங்களை சுத்தம் செய்வதைக்கூட சலிக்காமல் செய்வார். தன் வீட்டில் நெடுங்காலமாகப் பணியாற்றும் ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து அதை அவர்களுக்கே பத்திரப்பதிவும் செய்து கொடுத்துவிட்டார்.

10. விமானம் ஓட்ட முறைப்படி பயிற்சி எடுத்திருக்கிறார். பயிற்சி மறந்துவிடாமல் இருக்க துணையோடு ஓட்டிப் பழகுகிறார். தமிழ் நடிகர்களில் ரஞ்சனுக்கு அடுத்தபடியாக விமானம் ஓட்டத் தெரிந்த ஒரே நடிகர் அஜித்!





விஜய் சேதுபதி, "ட்ரெயின்" படத்துக்குப் பிறகு, மிஷ்கின் இயக்கும் படம், பூரிஜெகன்நாத் இயக்கும் படம், "காக்கா முட்டை" மணிகண்டன் இயக்கும் வெப்சீரிஸ் என கைவசம் வரிசையாக வைத்திருக்கிறார். சமீபத்தில், "மகாராஜா" இயக்குநர் நித்திலனிடம், "மகாராஜா 2" வெளியிடுவதற்கான சாத்தியங்கள் இருந்தால், முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறாராம், விஜய் சேதுபதி. அதற்கான கதைக்களம் அமைந்தால், பார்ட் ரூவில் நடிப்பார் விஜய் சேதுபதி என்கிறார்கள்.



கமல் நடிக்கும் "கல்கி 2898 ஏடி" படத்தின் இரண்டாம் பாகத்துக்கு வேண்டிய ஆரம்ப வேலைகள் தீவிரமாக நடக்கின்றன. இந்த ஆண்டின் கடைசியில் படப் பிடிப்புத் தொடங்கிவிடும் என்கிறார்கள். முதல் பாகத்தில் மிகக் குறைவான நேரமே வந்த கமல், இரண்டாம் பாகத்தில் பெரிய அளவில் இடம்பெறுவார் என்கிறார்கள். இதற்காக, சென்னைக்கு வந்து கமலைச் சந்தித்துப் போயிருக்கிறார், படத்தின் இயக்குநர் நாக் அஸ்வின்.

## வசூல் வேட்டை நடத்தும் வடிவேலுவின் கேங்கர்ஸ்

சுந்தர் சி - வடிவேலு கூட்டணியில் இதற்கு முன் தலைநகரம், வின்னர், நகரம் மறுபக்கம் என இதுவரை பல படங்கள் வெளியாகியுள்ளது. இவை அனைத்திலும் நகைச்சுவை வேற லெவலில் இருந்துள்ளது. அதன்பின், இவர்கள் இருவரும் இணைந்து 13 ஆண்டுகளுக்கும் மேலாக எந்தப் படமும் நடிக்கவில்லை. இதனால் ரசிகர்கள் மத்தியில் ஒரு ஏக்கம் இருந்தது. அதைப் போக்கும் வகையில், சுந்தர் சி இயக்கத்தில் வடிவேலு நடிப்பில் சமீபத்தில் "கேங்கர்ஸ்" திரைப்படம் வெளியானது. இப்படத்தில் கேத்ரின் தெரசா, வாணி போஜன், முனீஸ்காந்த் ஆகியோர் நடித்துள்ளனர். படம் வெளிவந்து ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்று வரும் நிலையில், கேங்கர்ஸ் திரைப்படம் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் ரூபாய் 12 கோடி வசூல் செய்துள்ளது.



## பத்ம பூஷன் விருது பெற்ற தமிழ் நடிகர்கள்!

### அஜித் குமார்:



நடிகர் அஜித் குமார் நடிப்பைத் தாண்டி ரேஸிங் பக்கமும் தற்போது பரபரப்பாக களமாடி வருகிறார்.

இவருடைய இந்த பன்முகத்தன்மையைப் பாராட்டும் வகையில் இவருக்கு பத்மபூஷன் விருது அறிவிக்கப்பட்டிருந்தது. ஏப்ரல் 28, 2025 குடியரசுத் தலைவர் மாளிகையில் இந்த விருதை அஜித் பெற்றுக் கொண்டார். பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் பலரையும் கௌரவிக்கும் வகையில் பத்ம விருதுகளை மத்திய அரசு வழங்கி வருகிறது. அஜித்தோடு, நடிகர் பாலைய்யா, கிரிக்கெட் வீரர் அஷ்வின் உட்பட பலரும் இந்த விழாவில் பத்ம விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். தமிழ் நடிகர்கள் பலரும் இந்த பத்ம விருதுகளை பெற்றிருக்கிறார்கள்.

### சிவாஜி கணேசன்:



நடிகர் சிவாஜி கணேசன்தான் பத்ம விருது பெற்ற முதல் தமிழ் நடிகர். தமிழ் நடிகராக தேசிய அளவில் அப்போதே பல அங்கீகாரங்களைப் பெற்றார் சிவாஜி. இப்படி சினிமாவுக்கு அவர் கொடுத்த அபரிமிதமான உழைப்பைப் பாராட்டி 1966ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து 1984ஆம் ஆண்டு பத்மபூஷன் விருதை இவர் பெற்றார்.

### எம்.கே. ராதா:



சுதந்திரத்துக்கு முன்பிருந்தே தமிழ் சினிமாவில் இயங்கி வந்தவர் நடிகர் எம்.கே. ராதா. எஸ்.எஸ். வாசன் இயக்கிய "சந்திரலேகா" திரைப்படத்திலும் இவர் நடித்திருக்கிறார்.

தொடர்ந்து பல்வேறு தேசப்பற்று மிக்க கதாபாத்திரங்களில் நடித்த இவரை கௌரவிக்கும் வகையில் கடந்த 1973ஆம் ஆண்டு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

### ரஜினிகாந்த்:



ரஜினிகாந்த் சினிமாவுக்கு ஆற்றியிருக்கும் அளப்பரிய பங்களிப்பை பாராட்டி அவருக்கு பத்மபூஷன் விருதும், பத்ம விபூஷன் விருதும் வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 2000ஆம் ஆண்டு இவருக்கு பத்மபூஷன் விருது வழங்கப்பட்டது. நான்கு தசாப்தங்களாக சினிமாவில் ஜொலித்து பலருக்கு ஊக்கமளிப்பவராக ரஜினி இருப்பதைப் பாராட்டும் வகையில் 2016ஆம் ஆண்டு இவருக்கு பத்மவிபூஷன் விருது வழங்கப்பட்டது.

### கமல்ஹாசன்:



கமல்ஹாசனின் பன்முகத் தன்மையைப் பாராட்டி அவருக்கு பத்மஸ்ரீ விருதும், பத்மபூஷன் விருதும் வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த 1990ஆம் ஆண்டு கமல்ஹாசனுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து 2014ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடமிருந்து பத்ம பூஷன் விருதைப் பெற்றுக் கொண்டார்.

### ஜெமினி கணேசன்:



ஹீரோயிசம் சார்ந்த கதாபாத்திரங்களில் மற்ற உச்ச நடிகர்கள் அப்போது கவனம் செலுத்திக் கொண்டிருக்க, காதல் கதைகளை தேர்வு செய்து அதில் வெற்றிக் கண்டவர் ஜெமினி கணேசன். ஜெமினி கணேசன் சினிமாவுக்கு கொடுத்த உழைப்பைப் பாராட்டி இவருக்கு 1971ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

### விவேக்:



மறைந்த நகைச்சுவை நடிகர் விவேக்கிற்கு கடந்த 2009ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டிருந்தது.

சினிமாவில் நகைச்சுவை வசனங்களில் சில சமூகத்துக்கு தேவையான கருத்துகளை சேர்த்துப் பேசுவது இவருடைய ட்ரேட்மார்க் ஸ்டைல். இந்த விடயத்தைப் பாராட்டும் வகையில் இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

### பிரபு தேவா:



"இந்தியன் மைக்கேல் ஜாக்சன்" என்றழைக்கப்படும் பிரபு தேவா சினிமாவுக்கும் நடனத்துக்கும் கொடுத்த பங்களிப்பைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. இந்த விருதை 2019ஆம் ஆண்டு பெற்றார்.

### விஜயகாந்த்:



சினிமா, அரசியல் என இரு பக்கங்களிலும் விஜயகாந்த் செலுத்திய பங்களிப்பைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் கடந்த 2024ஆம் ஆண்டு விஜயகாந்தின் மறைவுக்குப் பிறகு அவருக்கு பத்மபூஷன் விருது அறிவிக்கப்பட்டது. விஜயகாந்தின் மனைவி பிரேமலதா இந்த விருதைப் பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

448

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உலக பேறுகால மனநல தினம் - 07 மே 2025

என்னால முடியேல்லை. எனக்கு உதவி செய்ய யாரும் இல்லை. பிறந்து ஏழு மாதங்கள் ஆகிறது. அப்பம்மாவின் தோள்களில் சாய்ந்து கொண்டு உலகத்தை வியந்து பார்க்கும் அந்த பிஞ்சுமனதிற்குத் தெரியாது தனது தாயினை இழந்து நான்கு மாதங்கள் ஆகி விட்டதென. அனைவரையும் பார்த்துத் தனது இதழ்களை விரித்துச் சிரிக்கும் அந்தக் குழந்தையின் கண்கள் அப்பாவித்தனமாகவே காணப் படுகின்றன.

உலகத்தைச் சற்று வியந்து பார்க்கும் அந்த முழிக்கண்கள் என்னுள் மனத்துயரினை அதிகரித்து சென்றது. அக் குழந்தையைச் சூழ்ந்து நின்ற உறவுகள் அதனோடு செல்லம் கொட்டிக் கொண்டிருந்தனர். அங்கு ஏற்பட்டிருந்த அந்தத் துயர் மிக்க சூழலைக் கலைப்பதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர் போலும்? அந்தக் குழந்தைக்கு ஏழு வயது நிரம்பிய ஒரு சகோதரனும் அங்கு நின்றான். அவன் மனம் பேதலித்துக் காணப்பட்ட போதிலும் தனது உறவுகளுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

சில நாட்களுக்கு முன்தான் அக் குழந்தையின் தாய் தன் உயிரை மாய்த்துக் கொண்டாள். அம் மரணத்துக்கு முன் அவள் எழுதி வைத்த அந்த இறுதிக் கடிதம் என் நினைவுகளை அலைமோதச் செய்தன. அவள் தன்னுயிரை மாய்ப்பதற்கு முந்திய இரவில் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தாள். (இது பலரது ஊகம்)

"எனக்கு எழுத நிறைய இருக்கு. ஆனால் என்னாலை எழுதமுடியவில்லை. என்ர சாவுக்கு யாரும் காரணம் இல்லை. என்னால் நான் பட்ட கடனைச் சமாளிக்க முடியேல்லை. நல்லா மனம் குழம்பிப் போய் கடைசியா நான் எடுத்த முடிவுதான் இது. அம்மா வளர்த்த வளர்ப்புக்கு நான் விட்ட பிழையாலை சாகிறன். அம்மா மன்னிச்சு கொள்ளுங்கோ. என்னால முடியேல்லை அம்மா. நான் இருந்தால் தானே காசு கேட்டு ஆக்கள் வருவாங்க. தொந்தரவு செய்வாங்க. Sorry, Good bye, I love you, really I miss you and my family. இந்த வீட்டிலை முழுச் சந்தோசத்தையும் அனுபவிச்சவள். அதுதான் இங்கேயே மூண்டு தரம் சாக முயற்சி பண்ணினன். என்னைக் காப்பாத்திட்டீங்க. என்னை நீங்கள் சாக விட்டிருக்கலாம்.

எனக்கு இந்த வீட்டிலை வைச்சு எல்லாக் கடமையையும் செய்ய வேணும் எண்ட ஆசை. நான் இந்த முடிவு எடுத்ததற்கு காரணம் என்னால கடனைச் சமாளிக்க முடியேல்ல. திரும்பத் திரும்ப வட்டிக்கு வாங்கித்தான் பிரச்சினையை முடிச்சனான். என்னால தொடர்ந்து அப்பிடிச் செய்ய முடியேல்ல. எல்லோரும் என்னை மன்னிக்க வேணும். என் சாவு எல்லோருக்கும் ஒரு பாடமாக இருக்கட்டும். நம்பித்தான் காசு தருவாங்கள். பிறகு குடுக்கப் பிந்தினா காதைக் குடுத்துக் கேக்க முடியாத தகாத வார்த்தைகள் ஏன்?



"எங்கட அம்மா யாரிட்டையும் கை ஏந்தாம வளர்த்து விட்டாங்க. நான் விட்ட பிழையாலை கண்ட கண்ட நாய் எல்லாம் வந்து மரியாதை இல்லாம பேசுதுகள். அதைக் கேக்க முடியேல்ல. ஐயோ கடவுளே பொய் சொல்லிச் சொல்லியே எப்பவோ நான் செத்துப்போனன்.

நான் எடுத்த முடிவு முட்டாள் தனமாகத் தெரியும், என் இழப்பு எல்லோருக்கும் பெரிய பிரச்சினை. எனக்கு உதவி செய்ய யாரும் இல்ல. என்ர வீட்டிலையே களவு எடுத்து கடன் கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டதை நினைச்சா எனக்கே அசிங்கமாக இருக்கு."

"பிள்ளைகள் கவனம். என்ர செல்லங்கள் கவனம். அக்கா பிள்ளைகளை படிப்பிச்சு விடு. நான் நிறைய ஆசைகளோடு சாகிறன். ஆத்மா சாந்தி அடையாது. என்னை மன்னிச்சு கொள்ளுங்கோ. என்னால என்ர முடிவை மாத்த முடியேல்ல. சங்கிலி அறுதியாப் போச்சு. எப்படி எண்டாலும் நான் பட்ட கடனை அடைச்சு விடுங்கோ. இங்க காசுக்குத் தான் மதிப்பு எனக்கு இல்ல. அக்கா உன்னையும் அண்ணாவையும் நம்பி இந்த முடிவு எடுக்கிறேன். நிறைய இருக்கு என்னாலை எழுத முடியல்ல."

அவள் எழுதியிருந்த அந்தக் கடிதத்தில் காணப்பட்ட எழுத்துகள் பெரும்பாலும் கண்ணீரால் நனைந்து போயிருந்தன. அழுது அழுது அவள் அதை எழுதியிருக்கிறாள் என்பது நன்றாகத் தெரிந்தது. இது அவள் எழுதிய மூன்றாவது கடிதமாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் அவள் அதற்கு முந்தியதாக எழுதியதாகச் சொல்லக் கூடியவாறு இரு கடிதங்கள் கிழித்துக் கசக்கி வீசப்பட்டுக் கிடந்தன.

தொண்ணூறாமாண்டில் பிறந்த அந்தத் தாய் ஐந்தாம் ஆண்டுப் பரீட்சையில் அறுபது வீதமான புள்ளிகளைப் பெற்றுள்ளார். எனினும் க.பொ.தா சாதாரணதரப் பரீட்சையில் சித்தி அடையாமல் போனதால் உயர் கல்வி கற்கும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளார். இதே காலப் பகுதியில் தன்னிலும் இரண்டு வயது கூடிய அயல்வீட்டுப் பையனுடன் காதல்வயப்பட்டு ஓடிப் போயுள்ளார். அதன்பின் பெற்றோரின் சம்மதத்துடன் பத்தொன்பது வயதில் திருமணம் செய்து கொண்டார்.

இந்தப் பெண் சிறுவயதிலிருந்தே ஒரே ஓட்டமும் பரபரப்புமாக இளம் பருவத்தில் இருந்துள்ளார். வாழ்க்கையில் முன்னேறி உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற கனவுடன் முயற்சி செய்து கொண்டு இருந்துள்ளார். இருந்த போதிலும் அவரிடம் பிடிவாதக் குணமும் முற்கோபமும் அதிகளவில் காணப்பட்டுள்ளது.

யாரும் அவரைக் குறை சொல்வது அவருக்கு பிடிக்காது. எல்லோருடனும் நன்கு பழகும் சுபாவம் கொண்டிருந்த போதிலும் நீண்ட ஒரு ஆழமான நட்பு வட்டாரத்தை அவர் கொண்டிருக்கவில்லை. கனடா நாட்டிற்குக் கணவனை அனுப்ப வேண்டும் என்ற கனவுடன் கடையொன்றினை வீட்டிற்கருகாமையில் ஆரம்பித்துள்ளார். பிளாஸ்ரிக் பொருட்களை விற்கும் அந்த கடைக்கான மூலதனம் பெரியளவில் காணப்படவில்லை. (தொடரும்)

Dr.சி.சிவதாஸ்,
(உள மருத்துவ நிபுணர்)

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவர்களின் அடையாளத்தை பேணிய மகத்தான ஆத்மா

சிவபெருமான் திருவடி நிழலை அடைந்த நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தினை நினைவுகூர்ந்து இவ்வாரத்தை பிரார்த்தனை வாரமாக அனுட்டிக்குமாறு ஈழத்து சைவசமயிகளை அகில இலங்கை சைவ மகா சபை வேண்டுகின்றது.

குறிப்பாக இன்று ஞாயிற்றுக்கிழமை அனைத்து அறநெறிப் பாடசாலைகளிலும் சமய நிறுவனங்களிலும் சுவாமிகளின் நினைவுப்பிரார்த்தனைகளை உணர்வுபூர்வமாக அனுஷ்க்குமாறு வேண்டுகின்றோம்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் ஈழத்து சைவ சமயத்தின் அடையாளமாக உலகளாவிய ரீதியிலும் நாடாளாவிய ரீதியிலும் அனைத்து நிகழ்வுகளையும் பிரதிநிதிப்படுத்திய உயரிய குருமுதல்வருக்கு நாம் செய்யும் கைமாறாக அது இருக்கும்.

இளமைக்கால வாழ்வை சைவ சமய மேன்மைக்காக துறந்து யுத்த கால நெருக்கடிகளை எல்லாம் தன்னந் தனியாக கடந்து சைவர்களின் அடையாளத்தை பேணிய மகத்தான ஆத்மா அவர்.

எளிமையான எவரும் அணுகக்கூடிய சமயத்தலைவரான ஆதீனம் மிக எளிமையாகவே தன் விருப்பப்படி இறுதி வணக்க நிகழ்வையும் கண்டார்.

அந்த மகத்தான குருமுதல்வருக்கு உயரிய கௌரவத்தையும் வணக்க வழிபாடுகளையும் செய்வது மட்டுமன்றி சுவாமிகள் கட்டிக்காத்த உயரிய ஆதீன பாரம்பரியத்தினை சைவ சமயபீடங்கள் அமைப்புக்களின் தலைவர்கள் கூடி அவர் விட்டுச் சென்ற பணியை தொடர குருமகா சன்னிதானம் ஒருவரை உடனடியாக தேர்ந்தெடுத்து அருளாட்சி பொறுப்பை ஒப்படைத்தல் சைவசமயிகள் யாவர் முன்னும் தற்போது உள்ள கடமை ஆகும்.

**அகில இலங்கை சைவ மகா சபை**

# குரு முதல்வரின் மறைவு முழு நாட்டுக்கும் இழப்பாகும்



இன நல்லிணக்கத்துக்காக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆற்றிய ஆன்மிக சேவை அளப்பரியது. அவரின் மறைவு முழு நாட்டுக்கும் இழப்பாகும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில், "நல்லை ஆதீன குரு முதல்வர் இறையடி சேர்ந்துவிட்டார் என்ற செய்தி வேதனையளிக்கின்றது.

ஆன்மிகப் பணியென்பது புனிதமானது. அப்பணிஂய மிகவும் சிறப்பாக முன்னெடுத்தவர் தான் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

ஆன்மீக சேவைக்கு அவர் ஒருபோதும் மாசு ஏற்படுத்தவில்லை. அதன் புனிதத் தன்மையை கடைசிவரை காத்தார். நெருக்கடியான நேரங்களில் எல்லா நாட்டு மக்களுக்காகவும் ஆசி வேண்டி பூஜைகளை நடத்தியுள்ளார்.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையிலும் மக்களுக்காக பல சேவைகளை புரிந்துள்ளார். இப்படியான மகான்களின் மறைவு தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றாகும். பூரணமடைந்த சுவாமிகளின் ஆத்மா இறையடி சேர இறைவனை பிரார்த்திக்கின்றேன்." என அதில் குறிப்பிட்டுள்ளது.

**இராமலிங்கம் சந்திரசேகர், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்.**

# தீவக கடல் போக்குவரத்து; முன்னாயத்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பாக, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளுக்கான கடல்வழிப் போக்குவரத்து தொடர்பாக, கடற்படை அதிகாரிகளுடன் முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், நாளை மறுதினம் நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பாக, கடற்படையின் ஒத்துழைப்பினை குறிப்பாக தீவக போக்குவரத்துக்கு கடற்படையின் ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொண்டு கடல்வழி போக்குவரத்து தொடர்பாக ஆராய்ந்தார்.

குறிகாட்டுவான் படகுத் துறையிலிருந்து நெடுந்தீவுக்கு வடதாரகை கப்பல் மூலமும், நயினாதீவுக்கு தனியார் படகு மூலம் நாளை திங்கட்கிழமை 9 மணிக்கும் மற்றும் ஊர்காவற்றுறை படகுத்துறையிலிருந்து எழுவைதீவு மற்றும் அனலைதீவுக்கு கடற்படை படகுகள் நாளை திங்கட்கிழமை 9 மணிக்கும் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலன் னால் வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் தொடர்பான விபரங்களை முன்வைக்கப்பட்டது.

(6-8-33)

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி

## யாழில் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தினை முன்னிட்டு, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் ஊடகவியாலாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடக அமையத்திற்கு முன்பாக நேற்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு நீதி கோரியும் ஊடகவியலாளர்கள் கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (6-8-33)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 350 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 120 | 200 |
| தக்காளி | 900 | 850 | 800 | 800 | 1200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 250 | 250 | 200 |
| கோவா | 450 | 450 | 300 | 400 | 400 |
| கரட் | 850 | 1100 | 800 | 900 | 1000 |
| பூசணி | 200 | 240 | 200 | 150 | 240 |
| புடோல் | 200 | 250 | 200 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 250 | 480 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 200 | 250 | 320 |
| பயற்றங்காய் | 400 | 450 | 250 | 500 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 450 | 300 | 400 |
| பீற்றூட் | 450 | 600 | 350 | 600 | 600 |
| கறிமிளகாய் | 850 | 500 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1500 | 2200 | 1500 | 1400 | 2000 |
| போஞ்சி | 850 | 700 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 400 | 250 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 100 | 80-160 | 100 | 60 | 120 |
| தேசிக்காய் | 250 | 300 | 150 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 180 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 560 | 700 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 600 | -- | -- | 800 |
| முள்ளங்கி | 180 | 150 | 150 | 150 | 320 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில்
# இந்தியாவுக்கு உதவத் தயார்!

## ஆதரவுக்கரம் நீட்டிய அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஜம்மு காஷ்மீரில் 26 பேர் கொல்லப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு, பரந்த பிராந்திய மோதலை தவிர்க்கும் வகையில், இந்தியா பதிலடி கொடுக்கும் என எதிர்பார்ப்பதாக அமெரிக்க பிரதி ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பஹல்காமில் நடந்த தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை வேட்டையாட இந்தியாவுடன் பாகிஸ்தான் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

"இந்தப் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இந்தியா பரந்த பிராந்திய மோதலுக்கு வழிவகுக்காத வகையில் பதிலடி கொடுக்க வேண்டும் என்பதே எங்கள் நம்பிக்கை.

வெளிப்படையாகச் சொன்னால், பாகிஸ்தான், தங்கள் பிரதேசத்தில் செயற்படும் பயங்கரவாதிகள் வேட்டையாடப்பட்டு, கையாளப்படுவதை உறுதிசெய்ய இந்தியாவுடன் ஒத்துழைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என அவர் சர்வதேச ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.



குறித்த கொடிய தாக்குதல் நடந்தபோது வான்ஸ் தனது குடும்பத்தினருடன் இந்திய சுற்றுப்பயணத்தில் இருந்தார்.

கடந்த மாதம், அவர் பிரதமர் நரேந்திர மோடியை அழைத்து பயங்கரவாதத் தாக்குதலை கடுமையாகக் கண்டித்ததோடு, உயிர் இழப்புக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்திருந்தார்.

அத்துடன், பயங்கரவாதத்திற்கு எதிரான கூட்டுப் போராட்டத்தில் அமெரிக்கா இந்திய மக்களுடன் நிற்கிறது என்றும் அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளது என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார். (நி-8)

## போர் ஒத்திகைகளில் ஈடுபட்டுள்ள இந்தியா



(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் உள்ள பிரபல சுற்றுலாத் தளத்தில் கடந்த 22ஆம் திகதி லஷ்கர்-ஏ-தொய்பா அமைப்பின் கிளை அமைப்பான The Resistance Front (TRF) நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்தியா- பாகிஸ்தான் இடையே போர் மூழும் சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

இந்நிலையில், உத்தரப் பிரதேச மாநிலத்தில் கங்கா அதிவேக நெடுஞ்சாலைகளில் அதிநவீன போர் விமானங்களைத் தரையிறக்கும் ஒத்திகையில் இந்திய விமானப்படை ஈடுபட்டுள்ளது.

குறிப்பாக கங்கா அதிவேக நெடுஞ்சாலையில் ரபேல், ஜாகுவார், மிராஜ் ஆகிய போர் விமானங்களை, அவசர காலங்களில் தரையிறக்கும் ஒத்திகையில் விமானப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த நெடுஞ்சாலை பாகிஸ்தான் எல்லையில் இருந்து சுமார் 1,000 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள நிலையில் இந்திய விமானப் படையின் இந்த நடவடிக்கை அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி-8)

## நிவாரணத்துடன் காசா சென்ற கப்பல் மீது தாக்குதல்

(காசா)



காசாவுக்கு உதவிப் பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பல் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மோல்டா அரசு தெரிவித்துள்ளது.

மோல்டா அருகே ட்ரோன் தாக்குதலுக்குள்ளான இந்தக் கப்பலில் 12 ஊழியர்கள் மற்றும் நான்கு பொது மக்கள் பயணித்துள்ளனர்.

அவர்களது உயிருக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால் தாக்குதலுக்குள்ளான கப்பல் பயணத்தைத் தொடர முடியாமல் அதே இடத்தில் நிற்பதாகவும், அந்தக் கப்பல் மூழ்குவதற்கு வாய்ப்புள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 2010ஆம் ஆண்டு இதே போன்று காசாவுக்கு உதவிப் பொருட்களைக் கொண்டு சென்ற துருக்கி கப்பல் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். இதன் காரணமாக இஸ்ரேல் - துருக்கி இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## உணவுப் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளுங்கள்

### எல்லையில் உள்ள மக்களுக்கு பாகிஸ்தான் அறிவுறுத்தல்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீரில் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சிந்து நதி நீர் ஒப்பந்தம் ரத்து, இந்தியாவில் இருந்து பாகிஸ்தானியர்கள் வெளியேற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்த இந்தியா எடுத்த முடிவுக்கு பதிலடியாக இந்தியாவுடனான அனைத்து வர்த்தகத்தையும் பாகிஸ்தான் நிறுத்தி வைத்தது.

பாகிஸ்தான் தனது மருந்து மூலப்பொருட்களில் 30 முதல் 40 சதவீதம் வரை இந்தியாவை நம்பியுள்ளது. தற்போது இந்தியாவுடன் வர்த்தகத்தை நிறுத்தியதால் மருந்து பற்றாக்குறையில் சிக்கும் அபாயத்தில் பாகிஸ்தான் உள்ளது.



இதையடுத்து மருந்து விநியோகத்தைப் பாதுகாக்க பாகிஸ்தான் "அவசர" நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவின் பதிலடிக்குப் பயந்து, எல்லைக்கட்டுப்பாட்டுக்கோட்டில் உள்ள 13 தொகுதிகளிலும் உள்ள மக்களை இரண்டு மாதங்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதனிடையே, பாகிஸ்தான் இராணுவம் உள்ளூர் கிராம மக்களுக்கு ஆயுதப் பயிற்சியை அளித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (நி-8)

## அட்டாரி எல்லையை திறந்த பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

சொந்த நாட்டு மக்களுக்காக மூடப்பட்ட அட்டாரி எல்லையை பாகிஸ்தான் கடும் விமர்சனங்களுக்குப் பின்னர் மீண்டும் திறந்துள்ளது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் உருவாகி உள்ளது. இந்தியா எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தக் கூடும் என்று பாகிஸ்தான் கூறி வருகிறது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையேயான அட்டாரி-வாகா எல்லையை மூடுவதாகவும் அதற்கென காலக்கெடுவையும் இந்தியா விதித்தது. மத்திய அரசின் கெடு முடிந்து பின்னர் அது தளர்த்தப்பட்டது.

அதேநேரத்தில் பாகிஸ்தான் தனது எல்லையை மூடியதால் இந்தியாவில் இருக்கும் பாகிஸ்தான் மக்கள் தவித்தனர். சொந்த நாட்டு மக்களை ஏற்க பாகிஸ்தான் மறுப்பதாகக் கடும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இந் நிலையில் தற்போது மூடப்பட்ட அட்டாரி எல்லை வாயில்களை பாகிஸ்தான் திறந்துள்ளது. இதையடுத்து எல்லையில் தவித்த பாகிஸ்தானியர்கள் அவர்களின் சொந்த நாடுகளை நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாம் கடவுளுக்கு சொந்தமானவன் என்றுணரும் போதே உயர்ந்ததிலும் உயர்ந்த அன்பு அனுபவ மாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சைவ சமயத்தில் மறுமலர்ச்சி எழட்டும்

**....மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்** என்ற கந்தபுராணத்து வரிகளை நாம் பல தடவைகள் உச்சரித்திருந்தாலும் அதன் உட்பொருளை நாம் உணரவில்லை என்ற உண்மையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், கொல்லாமை – புலால் உண்ணாமை எனும் உயரிய அறத்தின் இருப்பிடமே சைவம்.

அதாவது பிற உயிர்களைக் கொன்று அவற்றைப் புசிப்பது பாவம்.

ஆகவே கொல்லான் புலாலை மறுக்கின்ற பக்குவம் நம்மிடம் இருக்க வேண்டும்.

அவ்வாறான பக்குவம் ஏற்படுவதாயின், பிற உயிர்களிடத்தில் அன்பு இருக்க வேண்டும்.

அன்பிருந்தால் மட்டுமே பிற உயிர்களிடத்து இரக்கமும் கருணையும் ஏற்படும்.

அதனாலேயே அன்பே சிவம் என்கிறது சைவம். இங்குதான் சைவசமயத்தின் உன்னதம் தெரிகிறது.

அதாவது நீ சிவன் என்று கடவுளை வணங்காதே. நீ மற்றவர்கள் மீது அன்பு செலுத்து. அவ்வாறு மற்றவர்கள் மீது அன்பு செலுத்துவாயாயின், அதுவே சிவம்.

இங்கு அன்பு என்பது அகவயத்தினூடு புறவயமாவது.

ஆக, அன்பெனும் சிவம் நம் உள்ளத்தில் குடியிருந்து விட்டால், அஃது கருணையாகி தன்னுயிர்போல் மன்னுயிர்களைப் போற்றுகின்ற பக்குவத்தை அடைந்து கொள்ளும்.

இதுவே சைவத்தின் தத்துவம்.

எனினும் சைவசமயத்தில் கூறப்படாத சில வரன்முறைகளை நாம் பின்பற்றுவதுதான் மிகப்பெரிய அபத்தம்.

ஒரு மனிதன் இறந்துவிட்டால், அந்த உடலை காண்பது, அதைத் தொடுவது என்பன தொடக்கு என்பதாகக் கருதப்படுகிறது.

இதை இன்னும் சுருங்கக்கூறின் சில மதங்கள் இறந்தவரின் உடலை தமது வழிபடு இடத்தில் வைத்துப் பிரார்த்தனை செய்கின்றன.

ஆனால் நாம் இறந்தவரின் உடலைத் தகனம் செய்யும் வரை அங்கிருக்கக்கூடியவர்கள் ஆலய வாசலுக்குச் செல்வது குற்றம் என்பதுபோல மனப்பதிவு செய்துள்ளோம்.

இதற்கும் மேலாக, அந்தணச் சிவாச்சாரியர்கள் மரணச் சடங்கில் கலந்து கொள்வது ஆகாது என்பது போலவும் அவ்வாறு மரணச் சடங்கில் பங்கேற்றால், அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும் என்றும் வகுத்துக் கொண்டதால், சமயத் தலைவர்களின் இறுதி நிகழ்வுகளில் கூட, அந்தணச் சிவாச்சாரியர்கள் பங்கேற்காமல் தவிர்க்கின்றனர்.

இத்துர்ப்பாக்கிய நிலைமை அவ்வளவு நல்லதல்ல என்பதுடன் இது சைவசமயத் தத்துவத்துக்கு மிகவும் முரணானது.

எனவே இத்தகைய வரையறைகள் அர்த்தமற்றவை. சமகால சூழலுக்குப் பொருத்தமற்றவை.

**ஆகையால் அத்தகைய நடைமுறைகளை மாற்றியமைத்து புதுமை செய்ய வேண்டும். இது காலத்தின் உடனடித் தேவை.**

# இந்திய - இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தம் வெகுவிரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## உறுதிபடத் தெரிவித்தார் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்புத் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒருசில விடயங்கள் இரு தரப்பு இணக்கப்பாட்டுக்கு எட்டப்பட்டுள்ளது. ஆகவே இந்தியாவுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடி வெகு விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது. வலுசக்தி துறையின் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் வலுசக்திதுறை அச்சுறுத்தலுக்குள்ளானால் தேசிய பாதுகாப்பு பலவீனமடையும்.

இலங்கைக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் பொறுப்பை அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றது.

மின்சாரத்துறையின் சுயாதீனம் பற்றி தற்போது பேசுபவர்கள் தான் கடந்த ஆண்டு மின்சார சபையின் சுயாதீனத்தை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் புதிய மின்சாரசபை சட்டத்தை இயற்றினார்கள். இந்தச் சட்டத்தை வெகுவிரைவில் திருத்தம் செய்வோம்.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி மாறுபட்ட பல விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இராணுவப் பயிற்சி, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் உட்பட பொதுவான விடயங்கள் மாத்திரமே இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு குறித்த தீர்மானங்களை எடுக்கும் உரிமை இலங்கை அரசுக்கு உண்டு என்று இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் இதனை அறியாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியது.

பாதுகாப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏன் பகிரங்கப்படுத்தவில்லை என்று கேள்வியெழுப்பப்படுகிறது. பாதுகாப்புத் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒருசில விடயங்கள் இரு தரப்பு இணக்கப்பாட்டுக்கு எட்டப்பட்டுள்ளது.

ஆகவே இந்தியாவுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடி வெகு விரைவில் இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அமைதியற்ற நிலை காணப்படுகின்ற சூழலில் கொழும்புக்குக் குண்டுத்தாக்குதல் நடத்தப்படும் என்றும் ஒரு சிலர் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறானவர்களின் கருத்துக்கள் குறித்து அவதானம் செலுத்தப் போவதில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பை சகல துறைகளிலும் உறுதிப்படுத்தியுள்ளோம் என்றார். (ம-7)

# ராமர் பாலம் முதல் சீதா எலிய வரை இராமாயண சுற்றுலா

## ஏற்பாடு செய்தது நாகை – காங்கேயன் கப்பல் சேவை நிறுவனம்

(சென்னை)

ராமர் பாலத்தில் 1 கி.மீ., தூரம் நடந்து சென்று தரிசிக்கும் வகையில் ராமர் பாலம் தொடக்கம் சீதாஎலிய வரையான ஆன்மீக, கலாசார சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நாகையிலிருந்து இலங்கைக்கு கப்பல் இயக்கும், "சுபம்" தனியார் கப்பல் நிறுவன இயக்குநர் சுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றிடம் இதுகுறித்து, அவர் மேலும் கூறியதாவது, நாகையில் இருந்து காங்கேசன்துறை துறைமுகம் வரை பெப்ரவரி 22 முதல் செவ்வாய்க்கிழமை தவிர்த்து, வாரம் ஆறு நாட்கள் பயணியர் கப்பல் இயக்கப்படுகிறது.

இதில் சிறப்பம்சமாக ராமாயணத்துடன் தொடர்புடைய முக்கிய இடங்களைப் பார்வையிடும் கலாசார, ஆன்மீக சுற்றுலா ஒன்றினைத் திட்டமிட்டுள்ளோம்.

நாகையில் இருந்து காங்கேசன் துறையை அடைந்து அங்கிருந்து சீதாவனம், சீதை சிறை வைக்கப்பட்ட அசோக வாடிகா, ராவணன் குகைகள், பழங்காலப் பிரசித்தி பெற்ற கோவில்கள், புராண இடங்கள் மற்றும் ராமர் பாலத்தைப் பார்வையிடும் வகையில் சுற்றுலா அமையும். சிறப்பாக ராமர் பாலத்தில் ஒரு மணி நேரம் நடந்து செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான கட்டண பக்கேஜாக இலங்கையில் ஐந்து இரவுகள், ஆறு நாட்கள் தங்குவதோடு உணவு, தங்குமிடம், வாகனம் உட்பட ஒரு நபருக்கு 30,000 ரூபாய் இந்திய ரூபாய்கள் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

# மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழப்பு

## திருமலையில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை - ஈச்சிலம்பற்றுப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரும் தமது வயலில் பொருத்தப்பட்டிருந்த யானைத் தடுப்பு மின்வேலியை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டு இருந்துள்ளனர்.

இதன்போது மாமனார் எதிர்பாராத விதமாக மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். இதனையடுத்து தனது மனைவியின் தந்தையை மீட்க முயன்ற 27 வயதுடைய இளைஞரும் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் .

இந்நிலையில் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான இருவரும் ஈச்சிலம்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7)

# காஷ்மீர் தாக்குதல்தாரிகள் இலங்கைக்குள் ஊடுருவல்!

## முடக்கி விடப்பட்ட சோதனைகள்

(கொழும்பு)

இந்தியாவின் காஷ்மீர்ப் பகுதியில் அண்மையில் நடத்தப்பட்ட பஹல்காம் படுகொலையுடன் தொடர்புடைய தாக்குதல் தாரிகள் இலங்கைக்குள் ஊடுருவக்கூடும் எனக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கிணங்க நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டன.

அத்துடன் சென்னையில் இருந்து நாட்டிற்கு வருகை தந்த விமானமும் விசேட சோதனைக்குட்படுத்தப்பட்டது.

தாக்குதல்தாரிகள் அறுவர் சென்னையில் இருந்து வருகை தந்த குறித்த விமானத்தில் இருப்பதாக கிடைத்த தகவலுக்கு அமையவே குறித்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025-12.11.2026 வரை



இதுவரை உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகுபகவான், 26.4. 2025 அன்று 5 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரப் போகிறார். கேது பகவான் உங்கள் ராசிக்கு இலாப ஸ்தானத்திற்கு வருகிறார். சுமரர் 1 1/2 ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் அதே இடத்தில் சஞ்சரித்து அங்குள்ள நடசத்திர பாத சாரங்களுக்கேற்ப பலன் களை வழங்குவார்கள்.

5ஆம் இடத்திற்கு ராகு வருவ

உங்கள் ராசிநாதன் சுக்கிரனுக்கு குருபகவான் பகைக்கிரக மாவார். அவரது காலில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, மிக மிக கவனத்தோடு இருக்க வேண்டும். வீண் பழிகளுக்கு ஆளாக நேரிடும்.

**சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11.2025 முதல் 9.7.2026 வரை)**

சுய சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும் பூர்வீகச் சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் இருந்த தடை அகலும் பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். தொழில் மற்றும் வியாபாரத்தில் கணிசமான தொகை கைகளில் புரளும். இது போன்ற நேரங்களில் பிள்ளைகளுக்கும், வாழ்க்கைத் துணைக்கும் வேலை கிடைத்து உதிரி வருமானம் பெருகும். வாடகை கட்டடத்தில் நடை பெற்ற தொழிலை சொந்தக் கட்ட டத்திற்கு மாற்றும்

ஆற்றல் உங்களுக்கு இருந்தாலும், கொடுக்கல்- வாங்கலில் தடுமாற்றம் ஏற்படும். ஒரு தொகை செலவழிந்த பின்னரே, அடுத்த தொகை உங்கள் கரங்களில் புரளும் தொழில் பங்குதாரர்களால் சில பிரச்சினைகள் வரலாம். குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம் (28. 6.2025 முதல் 5.3 2026 வரை)**

பூரம் நட்சத் திரக்காலில் சுக்கிர




வாங்கும் முயற்சி கைகூடும். ஒப்பந்தங்கள் அடுக் கடுக்காக வந்து உள்ளத்தை மகிழ்விக்கும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று சனி பகவான், மீன ராசிக்கு பெயர்ச்சியாகிறார் உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்திற்கு சனி வரும் பொழுது, ஜீவன ஸ்தானம் பலப்படுகிறது. எனவே தொழில் மற்றும் உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றங்கள் கிடைக்கும். தனித்தனி இடங்களில் வேலை பார்த்து வந்த தம்பதியர் இப் பொழுது ஒரே இடத்தில் இருந்து பணிபுரிய வாய்ப்பு உருவாகும். "படித்து முடித்த பிள்ளைகள் வேலை இல்லாமல் இருக்கிறார்களே" என்ற கவலை மறையும், அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் பலவும் நடைபெறும்

## பஞ்சம ஸ்தானத்தில் ராகு நெஞ்சம் மகிழும் வாழ்வு!

தால் பிள்ளைகளால் பெருமை சேரும். பிரச்சினைகள் படிப்படியாக குறையும். திருமண முயற்சிகள் கைகூடும். பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும், உத்தியோகத்தில் ஏற்படும் மாறுதல் திருப்தி தராது. சென்ற இடம் மனதிற்கு பிடிக்காமல் மீண்டும் பழைய இடத்திற்கே வரும் வாய்ப்பு உண்டு. எதிர்காலத் திட்டங்கள் எளிதில் நிறைவேறும்

லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் எதிர்பார்த்ததை காட்டிலும், கூடுதல் இலாபம் கிடைக்கும். சமூகத்தில் உயர் நிலையில் உள்ளவர்களின் ஆதரவோடு, பல நல்ல காரியங்களைச் செய்வீர்கள். வாங்கிய கடனை கொடுத்து மகிழ்வீர்கள்.

**குரு சாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது உடன்பிறப்புகளின் வழியில் ஒரு சில பிரச்சினைகள் வந்து அலைமோதும். உத்தியோகத்திலும் பிரச்சினைகள் வரலாம்

முயற்சி கைகூடும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, அற்புதமான நேரம் இது, உடன் பிறப்புகளும், உடனிருப்பவர்களும் உறுதுணையாக இருப்பார்கள். கொடுக்கல் வாங்கல் சரளமாக இருக்கும். வீடு கட்டுவது அல்லது வீடு வாங்குவது பற்றிய சிந்தனை அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். உத்தியோகம் சம்பந்தமாக நீங்கள் எடுத்த முடிவை மாற்றிக் கொள்வீர்கள். இடம், பூமி விற்பனையால் இலாபம் உண்டு.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்தரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, மிகமிக கவனமாக செயற்பட வேண்டும். எதிர் காலத்தை பற்றிய பயம் அதிகரிக்கும். எதையும் சமாளிக்கும்

சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது அற்புதமான பலன்கள் வந்து சேரும் பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும் உத்தியோகத்தில் நீங்கள் கேட்ட சலுகைகள் கிடைக்கும் உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தை கண்டு ஆச்சரியப்படுவர். அலுவலகத்தில் உங்கள் திறமை பளிச்சிடும் ஜாமீன் கையெழுத்து போட்டு வாங்கிக் கொடுத்த பணம், திரும்பி வருவதற்கான அறிகுறி தென்படும் சுப காரியங்கள் நடைபெறும் சூழ்நிலை உண்டு தொழிலில் புதிய பங்குதாரர் களை இணைத்துக் கொண்டு செயற்படுவீர்கள்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11.2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். திட்டமிட்ட காரியங்களை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். வெளிநாட்டு வர்த்தகம் ஆதாயம் தரும் புதிய முதலீடுகள் செய்து தொழில் வளர்ச்சியில் அக்கறை காட்டுவீர்கள். வாகனம்

நேரம் இது உத்தியோகத்தில் இருந்து விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு, சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சனிக்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் மேலும் நன்மைகளைப் பெறலாம்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. 11.5.2025 அன்று குரு பகவான், மிதுன ராசிக்குப் பெயர்ச்சியாகிறார். அப்பொழுது அதன் பார்வை பலனால் உங்கள் ராசி புனிதப்படுகிறது. எனவே ஆரோக்கியம் சீராகும். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். செல்வாக்கு உயரும். திடீர் முன்னேற்றம் வந்து சேரும். சகோதர ஒற்றுமை பலப்படும் பூர்வீகச் சொத்து சம்பந்தமாக நடை பெற்று வந்த பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். ஒக்டோபர் 8 ஆம் திகதி குரு பகவான், அதிசாரமாக கடக ராசிக்கு பெயர்ச்சியாகிறார். அப்பொழுது குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். இடம் வாங்கி வீடு கட்டும் யோகம் உண்டு. உத்தியோக மாற்றம் உறுதியாகலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையில்...

யாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பொலிஸ் துறையில் 10ஆயிரத்துக்கும் அதிகமான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதுகுறித்து பொலிஸ் திணைக்களத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம் 10 ஆயிரம் பொலிஸாரை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக இவ்வாண்டு 2 ஆயிரம் பொலிஸார் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதில் 500 தமிழ்ப் பொலிஸாரை இணைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளோம் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். (ம-7)

## நீர்வேலியில்...

கந்தராஜா (வயது-24) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தகவலளிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## உள்ளூராட்சித்...

மாட்டார்கள் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆசிய கண்காணிப்பு அமைப்பு உள்ளிட்ட வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்கள் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலைக் கண்காணிக்க நாட்டிற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 524...

பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் தேர்தல் விதிமுறைகளை மீறிய 43 வேட்பாளர்களும் 190 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது 41 வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ம-7)

## வியட்நாம்...

நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த விஜயம் அமையவுள்ளது.

இதன்படி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்று முதல் 6ஆம் திகதி வரை வியட்நாமில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுகளை மேலும் உறுதிப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## புலிகளிடமிருந்து...

நேற்று யாழில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "தங்கங்களை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு இல்லாவிட்டால் அதனை ஒரு பொது நிதியத்தில் சேகரித்து அந்தப் பொது நிதியத்திற்கு அரசாங்கத்தினால் மேலும் நிதி போட்டு குறித்த வடக்குப் பிரதேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்றார். (ம-7)

## நீரில் மூழ்கிய...

பெற்றுள்ளது.

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் குளத்தில் மூழ்கியே மாணவன் உயிரிழந்துள்ளார்.

தற்போது உயிரிழந்த மாணவனின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மகிந்தவின்...

டுள்ள விஜேராம இல்லத்தைப் புனரமைப்பதற்காகக் கடந்த 2021ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதம் 06ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அதன் பின் எந்தவிதக் கேள்வி கோரலும் இன்றி, ஒப்பந்தக்காரர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதுடன் புனரமைப்பு வேலைகளுக்காக சுமார் 119 கோடி 62 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இதில் 55 கோடியே 70 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் அளவில் போலியான கொள்வனவுச் சீட்டு மற்றும் அதிகரித்த விலை கொண்ட கொள்வனவுச் சீட்டுகள் ஊடாக மோசடி செய்யப்பட்டுள்ளமை கணக்காய்வு அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தற்போது மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-7)

## 92...

பீடாக பெற்றுக்கொண்டுள்ளனர் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல்ஹொரணை கோன பொல பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வைத்து அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்தத் தகவலை வெளியிட்டார்.

2022 அரகலய காலப் பகுதியில் மே 9ஆம் திகதி இடம்பெற்ற தீ வைப்புச் சம்பவங்களால் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையின் படி 43 எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு 1.22 பில்லியன் ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தேர்தலுக்கான...

சேர்ந்த சுமார் 75,589 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதற்கிடையில் எந்தவொரு வாக்காளருக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்கவில்லையாயின் தங்களுக்கு அருகிலுள்ள அஞ்சல் நிலையத்திற்குச் சென்று வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.05.03
சீட்டிழுப்பு இலக்கம் 5820
R 3 0 7 8 4 7
அத சம்பத R 7 8 4 7
சீட்டிழுப்பு இலக்கம் 0395
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1850
W 30 40 49 78 W
Double Chance 38284

மெகா பவர்
திகதி 03/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2168
H 24 12 18 29 46

ஜய
திகதி 2025.05.03
சீட்டிழுப்பு இலக்கம் 088
S 5 4 6 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4062
சீட்டிழுப்பு திகதி 03.05.2025
T 04 06 11 61
T
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.03
சீட்டிழுப்பு இலக்கம் 1129
மிதுனம் 09 23 48 50 மிதுனம்
14301 46

உத்தியோகபூர்வ முடிவுகள்
03.05.2025 528
Q 9 7 1 8 2 6
89349
ரூ.36,593,214.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2794
சீட்டிழுப்பு திகதி 2025.05.03 தினம் சனிக்கிழமை
22 42 71 73 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 59,847,136.80
DLB

சனிதா
03.05.2025 4955
09 19 27 77 W
57487
DLB

சசிரி
675 03.05.2025 சனிக்கிழமை
17 35 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

சீட்டிழுப்பு வாரம் 4506
சீட்டிழுப்பு திகதி 03.05.2025 தினம் சனிக்கிழமை
10 41 44 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,601,882.80
163018
DLB

J 30 12 24 41 68
1971 03.05.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.573,854,029.60
DLB

அத கோட்டிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை வெற்றி வாரம்: 2620
சீட்டிழுப்பு திகதி 2025.05.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,717,084.80
10 25 53 56 F
116459
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Village Hotel Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk

077 544 8503 (1092)



## ICT
## A/L 2027 ஆரம்பம்

கலைவாணி கல்வி நிறுவனம் - கோப்பாய்
14.05.2025 புதன் 7.00 PM
(நேர ஒழுங்கு கலந்துரையாடப்படும்)
E. சிவச்செல்வன் (B.IT, M.Ed)
077 614 6431,070 647 9747 (1087)



## IELTS CLASSES

கொழும்புப் பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.
Special offer 50% Discount to all the Courses
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970 (3844)



## காணி விற்பனைக்கு

சுதுமலை அம்மன் ஆலயத்தில் இருந்து மிக அண்மையில் பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி 50m 1 பரப்பின் விலை 60,00000/=

076 428 4896 (4072)



## வெல்டிங் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை.
- மதிய உணவு வழங்கப்படும்.
- சம்பளம் :- நாள் ஒன்றிற்கு 4,000/=
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு :
077 937 0000, 075 988 1000 (4102)



## மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida"ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்து விடாதீர்.



"நாங்கள் உங்களோடு"
ஆர்க் . என் . கம்பனி
- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803 (4088)



## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு ஒரு மாதத்திற்கு தங்கி நின்று வேலை செய்வதற்குப் பணிப் பெண் தேவை. வயது 35 இற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம் உணவு, போக்குவரத்து வசதிகளும் வழங்கப்படும்.

077 258 5564 (5564)



## ஆண் வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு வியாபாரம் செய்யும் அனுபவம் உள்ள 18 - 30 வயதுடைய ஆண் வேலையாள் தேவை.
- 18 – 30 வயதுடைய ஆன் வேலையாள் தேவை.
- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மாதம் 60,000 – 70,000 அடிப்படை சம்பளம் வழங்கப்படும்.
- நிரந்தர வேலை வழங்கப்படும்.
- வியாபாரம் தெரிந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

077 937 0000, 075 988 1000 (4102)



## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600 (4102)



## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-2884)



## அறிவித்தல்

076 XXX X523

மேற்படி தொடர்பு இலக்கம் எமது சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் பொதுமக்கள் மேற்படி தொடர்பிலக்கத்துடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்

ஈ – சன்ஸ்
148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613 (C-2882)



## மணமகள் தேவை

யாழ். இந்து. கௌரவ குடும்பம். 1992 இல் பிறந்த கொழும்பில் தொழில் புரியும் சொந்த வீடு. சொந்த வியாபாரஸ்தலங்கள் உள்ள 3 மாதத்தில் விவாகரத்தான (குழந்தைகள் அற்ற) மணமகனுக்கு வேலை, சீதனம் தேவை இல்லாத திருமணம் முடிக்காத மணமகள் தேவை.

077 906 1527 (1095)



## கார் விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையில் உள்ள (CBE) இலக்க (Nissan Moco) நிசான் மொகோ கார் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
நல்ல நிலையில் உள்ள (yamaha Mate) ஜமகா மேட் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
076 693 2227 (4103)



## வேலையாட்கள் தேவை

இயக்கச்சியில் உள்ள தோட்டம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆண்/ பெண் வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு :
+94778876969
0014166661855 (1100)



## வேலையாட்கள் தேவை

1. முகாமையாளர்
2. வாகன சாரதி
3. Cashier
4. கணக்கீட்டு உதவியாளர்
5. களஞ்சியக் காப்பாளர்

077 211 0996
077 245 4224 (1097)



## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

நொதேன் பாதுகாப்புச் சேவை (Northern Security Services)

தனியார் வீடுகள், வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள், வயோதிபர்கள் வசிக்கும் வீடுகள், சிறுவர் இல்லங்கள், சூரிய பனல்கள் பொருத்தப்பட்ட இடங்கள், விருந்தினர் விடுதிகள், திருமண மண்டபங்கள், வாகனத்தரிப்பிடங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளுக்கான சிறப்புப் பாதுகாப்புச் சேவைகள்
(யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்)

தொடர்புகளுக்கு - 077 540 1211, 071 842 9917 (C-2886)



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 218/= | Max 10Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 257/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg கீரி சம்பா அரிசி | - 260/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 400/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 215/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 700g சுபோஷா(திரிபோஷா) | - 570/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140/=~~ |



400g Anchor
1040/=
~~1100/=~~



1Kg சன்லைட் பவுடர்
270/=
~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(1099)
Happy Supermarket
0777 8080 30



## மணமகள் தேவை

42 மற்றும் 38 வயதுடைய கனடா மணமகன்களுக்கு இலங்கையில் மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு :
சொர்க்கம் திருமண சேவை கனடா
+1 416 666 1855
+94 77 200 0230 (1100)



## கடை
### வாடகைக்கு உண்டு

210 அடி அகலம் 37 அடி நீளம் மானிப்பாய் வீதி பள்ளிவாசலுக்கு முன்
தரகர்கள் தேவையில்லை.
நேரடியாக் தொடர்பு கொள்ளவும்.
077 617 6413 (4087)



## காணி விற்பனைக்கு

சுன்னாகத்தில் இருந்து புன்னாலைக் கட்டுவன் செல்லும் பிரதான வீதியோரமாக 28 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீதியோர முகப்பு 300 அடி நீளம் கொண்டது.
076 742 4301, 075 710 9639
(தரகர் தொலைபேசி இலக்கம்)
Easy Real Estate (4096)



## காணி விற்பனைக்கு

யாழ். காங்கேசன்துறையில் K.K.S சந்தி பலாலி விமான நிலையம் என்பவற்றுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் காணிகள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :
075 521 3533 (4083)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 762





"அதை நீ எதற்காகத் தெரிந்து கொள்ள வேணும்?" "ஏதேனும் ஒரு சமயத்தில் உபயோகப்படலாம் யார் கண்டது?" அச்சமயம் சற்றுத் தூரத்தில் வேறு பேச்சுக் குரல்கள் கேட்டன. "தாமதிப்பதற்கு நேரமில்லை வைஷ்ணவரே! நான் திரும்பி வருகிற வரையில் இங்கேயே இருப்பீர் அல்லவா? அல்லது சுக்கிரீவன் வாலிக்குச் செய்தது போல் செய்துவிடுவீரா!"

"உயிர் உள்ள வரையில் இங்கேயே இருக்கிறேன் ஆனால் நீ திரும்பி வருவது என்ன நிச்சயம்?"

"உயிர் இருந்தால் நானும் திரும்பி வருவேன்" இவ்விதம் சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் நாலு பாய்ச்சலில் துவாரம் தெரிந்த இடத்தை நோக்கி ஓடினான். அதற்குள் இறங்கினான். மறுகணமே அந்த இருண்ட பள்ளத்தில் மறைந்தான். பிலத் துவாரம் அவனை அப்படியே விழுங்கி விட்டதாகத் தோன்றியது. கோயிலுக்குள் சென்றிருந்த இடும்பன்காரி வெளியே வந்து சுற்று முற்றும் பார்த்தான், திறந்திருந்த துவாரம் கண்ணில் பட்டது. உடனே அவ்விடம் சென்று பலி பீடத்துக்குப் பக்கத்தில் நாட்டப்பட்டிருந்த சூலாயுதத்தைச் சுழற்றித் திருகினான்.

இடம் பெயர்ந்து அகன்றிருந்த யானையும் குதிரையும் மறுபடியும் நெருங்கி வந்தன. துவாரம் அடைப்பட்டு இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது! இந்தக் காரியத்தைச் செய்துவிட்டு இடும்பன்காரி மறுபடியும் வாசற்படியண்டை வந்தான். அதே சமயத்தில் ரவிதாஸன், சோமன் சாம்பவன் முதலியவர்களும் வேறு திசையிலிருந்து வந்து சேர்ந்தார்கள். ஆழ்வார்க்கடியான் மூங்கில் காட்டுக்குப் பின்னால் இன்னும் நன்றாக மறைந்து கொண்டான். கோவில் வாசற்படி மேல் ரவிதாஸன் உட்கார்ந்து கொண்டான் மற்றவர்கள் அவன் எதிரே தரையில் அமர்ந்தார்கள்.

"தோழர்களே! நாம் கைக்கொண்ட விரதம் நிறைவேறும் சமயம் நெருங்கிவிட்டது!" என்றான் ரவிதாஸன்.

"இவ்வாறுதான் ஆறு மாதமாக 'நெருங்கிவிட்டது' 'நெருங்கிவிட்டது' என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்" என்றான் ஒருவன்.

"ஆம், அதில் தவறு ஒன்றுமில்லை ஆறு மாதமாகவே அந்த நாள் நெருங்கி வந்து கொண்டிருந்தது. விரல்விட்டு எண்ணக் கூடிய நாள் கணக்கில் நெருங்கி விட்டது. ஆதித்த கரிகாலன் காஞ்சியை விட்டுக் கிளம்பிவிட்டான் என்ற செய்தி வந்திருக்கிறது. திருகோவலூர்க் கிழவன் அவனைத் தடுத்து நிறுத்தச் செய்த பிரயத்தனம் பலிக்கவில்லையாம்!"

"வழியில் வேறு யாராவது தடுத்து நிறுத்த மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?"

"ஆதித்த கரிகாலன் முன் வைத்த காலைப் பின் வைக்கிறவன் அல்ல, இனி யார் தடுத்தாலும் கேட்க மாட்டான்" "அவனுடைய சகோதரி சொல்லி அனுப்பிய செய்தி போய்ச்சேர்ந்தால்"

"அது எப்படிப் போய்ச் சேரமுடியும்? செய்தி கொண்டு போன வாலிபனைத்தான் காட்டில் கட்டிப் போட்டு விட்டு வந்தோமே?"

"அழகுதான்! அவனை இன்று காலையில் கொள்ளிடத்தின் வடகரையிலே பார்த்தேன். அவனோடு நமது இன்னொரு பகைவனும் சேர்ந்திருக்கிறான்." அது யார்?" "போலி வைஷ்ணவ வேடதாரி!" "அப்படியானால் நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது தான்.

(தொடரும்...)

சிறுவர் அரங்கம்

# வாழைப்பழப் போட்டி



ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு விசேஷம் இருக்கும். அதைப்போல் சிவபுரிக்கும் இருந்தது.

சிவபுரியில் பிரசித்தமானது அதன் பள்ளிக்கூடம். அடிதடி, சண்டை, வம்பு, தும்பு இத்தனைக்கும் பேர் போனது.

இப்பள்ளி மாணவர்கள் எப்போதும் இரண்டு அல்லது மூன்று கோஷ்டிகளாகப் பிரிந்து சண்டையிட்டுக் கொண்டே இருப்பார்கள். இதைச் சரி செய்வதற்குள் ஆசிரியர்களுக்குப் பெரும்பாடாக இருக்கும்.

ஆசிரியர்கள் இப் பள்ளியிலிருந்து விடுதலை கிடைக்கும் நாளை ஆவலோடு எதிர் நோக்கி இருப்பார்கள்.

அதேபோல் சிவபுரி பள்ளிக்கு மாறுதல் என்றால் ஆசிரியர்களுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கும். இந்தச் சமயத்தில் மாணவர் மத்தியில் ஒரு செய்தி வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது.

தேவராஜன் என்ற ஒரு புதிய தலைமை ஆசிரியர் சிவபுரி பள்ளிக்கு வரப் போகிறார் என்பது அதுவும் அவரே விரும்பி இந்த பள்ளிக்கூடத்திற்கு வருகிறாராம். இந்தப் பள்ளியைத் திருத்துவதற்கே அரசாங்கம் இவரை அனுப்புகிறதாம்.

ஒரு திங்கட்கிழமை அன்று தேவராஜன் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். தேவராஜன் ஆசிரியர்களை அழைத்துப் பேசினார். மாணவர்களை அழைத்துப் பேசினார். அவர்களின் பிரச்சினைகள் என்ன என்று தெரிந்து கொண்டார். மாணவர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாதது தான் இதற்குக் காரணம் என்று புரிந்து கொண்டார்.

அடுத்த நாள் காலை பள்ளியின் எதிரில் பிரேயருக்காக மாணவர்கள் கூடினர்.

வகுப்புவாரியாக மாணவர்கள் வரிசையில் நின்றனர். ஆசிரியர்கள் பக்கத்தில் நின்றனர்.

"நீராருங் கடலுடுத்த" பாடலுடன் பிரேயர் தொடங்கியது. தலைமை ஆசிரியர் மைக் முன்னால் வந்து நின்றார்.

மாணவர்களே இன்று உங்களுக்கு நான் ஒரு புதிர் விளையாட்டுப் போட்டி ஒன்றை வைக்கப் போகிறேன்" என்றார். பிரேயரில் விளையாட்டா" என்று மாணவர்கள் கிண்டலடித்தனர். ஆசிரியர்களும் முகத்தைச் சுளித்தனர். நான் இப்பொழுது உங்களுக்கு ஆளுக்கு ஒரு வாழைப்பழம் தரப் போகிறேன். இதை நீங்கள் நான் சொல்லும் வரை சாப்பிடக்கூடாது" என்றார்.

அதற்குள் வாழைப் பழக் கூடைகள் வந்து இறங்கின. தலைமை ஆசிரியரும், இதர ஆசிரியர்களும் வாழைப்பழத்தை மாணவர்களுக்கு ஒவ்வொன்றாகக் கொடுத்தனர். "மாணவர்களே இப்போது உங்கள் கையில் இருக்கும் வாழைப் பழத்தை சாப்பிடலாம். ஆனால் உங்கள் கையை மடக்கக் கூடாது" என்றார் தேவராஜன், மாணவர்களிடம் சல சலப்பு ஏற்பட்டது. கையை மடக்காமல் எப்படி வாழைப் பழத்தை சாப்பிடுவது? பல மாணவர்கள் பல விதமாக முயற்சித்தனர். ஆசிரியர்கள் கூட சிலர் மாணவர்களுக்குப் பதிலாக முயற்சித்தனர்.

"நீங்கள் உங்கள் கையில் இருக்கும் பழத்தை நான் சொன்ன முறையில் சாப்பிட்டு விட்டால் நீங்கள் சொல்வதை யெல்லாம் நான் கேட்கிறேன். அப்படி இல்லை எனில் கை மடக்காமல் சாப்பிடும் வித்தையை நான் சொல்லித் தருகிறேன். ஆனால் அதற்குப்பிறகு நான் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?" என்றார் தேவராஜன். சிறிது நேரத்திற்குப் பின்னர் கை மடக்காமல் நீங்கள் சாப்பிட முடியாது. ஆனால் அடுத்தவர் கை மடக்காமல் உங்களுக்குக் கொடுக்கலாம் அல்லவா? என்றார் தேவராஜன். அடுத்த நிமிடம் மாணவர்கள் பழங்களை தின்று தீர்த்தனர்.

மாணவர்கள் தலைமையாசிரியரின் புத்திக் கூர்மையைப் பாராட்டினர். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒற்றுமையாக இருந்தால் பயன் எல்லோருக்கும் கிடைக்கும் அல்லவா?" என்று கேட்டார். அன்று முதல் மாணவர்கள் தலைமையாசிரியரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டனர். மாணவர்கள் ஒற்றுமையுடன் சிறந்து விளங்கினர். அந்த ஆண்டு அந்த பள்ளி மாநிலத்திலேயே சிறந்த பள்ளியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org